பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 34 கதிர் 201 ஆனி 03 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 18 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
PhD / DBA
Doctor of Business Administration
0777 174 443
BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்!

## அரச தலைவர் தலைமையில் இன்று அமைச்சரவையும் கூடும்

கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் ஜூன் மாதத்துக்குரிய இரண்டாவது வார சபை அமர்வில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இன்று முற்பகல் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

19

## பதில் அமைச்சர்கள் கடமை ஏற்றுக்கொள்வதற்கு தடை!

கொழும்பு, ஜூன் 18

முஸ்லிம் அரசியல்வாதிகள் விலகிய அமைச்சுக்களுக்குப் பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர்களான லக்கி ஜயவர்த்தன, புத்திக பத்திரன, அனோமா கமகே ஆகியோரை, அந்தப் பதவிகளுக்கான கடமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார் என்று அறிய முடிகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால்

06

## கெருடாவில் நேற்று 30 கிலோ கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 18

வல்வெட்டித்துறை, கெருடாவிலில் நேற்றுக் காலை 30 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. காணி உரிமையாளர் கொடுத்த தகவலின் அடிப்படையில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

வெற்றுத் தோட்டக் காணியில் மரங்களுக்கு இடையே பொதியொன்று மறைத்து வைக்கப்பட்

19

## 2015 ஆம் ஆண்டு விட்ட தவறை உணர்ந்துள்ளனர் நாட்டு மக்கள்

### பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 18

தேவையற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கு நாட்டு மக்கள் மீது எவ்வித அக்கறையும் இல்லை. 2015 ஆம் ஆண்டு இவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தமை தவறு என்பதை மக்கள் இன்று நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிறி லங்கா பொது மக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேவையற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கு நாட்டு மக்கள் மீது எவ்வித அக்கறையும் இல்லை காலம் சென்ற ஐக்கிய

19

## வாள்வெட்டுக் குழுவினரை பேச்சுக்கு ஆளுநர் அழைத்தமை பெரும் தவறு!

### பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் நசுக்குங்கள் என்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஜூன் 18

வடக்கு மாகாண ஆளுநர் வாள்வெட்டுக் குழுவை பேச்சுக்கு அழைத்தமை நாட்டின் சட்டத்தின் கீழ் முரணாகும். அவர்களைப் பயங்கரவாத சட்டத்துக்கு கீழ் கைது செய்யவே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் சோசலிச மக்கள் முன்னணி நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத்

19

## சவால்கள் வந்தாலும் இலக்கை அடைவோம்

### சுமந்திரன் எம்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 18

முன்னெப்போதும் இல்லாத பலத்த சவாலை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். இது கஷ்டம் என்று கைவிட்டுவிட்டு நாங்கள் ஓடிவிட முடியாது. நிச்சயமாக இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து தமிழ் மக்களின் இலக்கை நாம் அடைந்தே தீருவோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்

19

## காணியை எழுதித் தரக் கேட்டு மாமி மீது மருமகன் தாக்குதல்!

### உடுவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் அந்தப் பெண்ணின் மருமகன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை உடுவில், அம்பலவாணர் வீதியில் நடந்துள்ளது.

74 வயதுடைய பெண்ணே கழுத்து மற்றும் உடலில் காயங்களுடன் அயலவர்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரது மகளின்-கணவரே தாக்குதல் நடத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பெண்ணின் காணி ஒன்றைத் தமக்கு எழு

06

## வீதியில் துரத்தி சென்று பெண்ணின் கழுத்தறுத்து கொன்ற சிறிய தந்தை

### இருபாலையில் நேற்றுக் கொடூரம் காணிப் பிணக்கே காரணம் என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

கத்தியால் கழுத்தில் பல தடவை குத்தப்பட்ட இளம் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது சகோதாரன் வயிற்றில் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தக் கொடூரத்தை உயிரிழந்தவரின் சிறிய தந்தையே செய்துள்ளார். அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலை கந்தவேள் பாடசாலைக்கு

19

## அடுத்த கட்ட நகர்வு தொடர்பாக கூட்டமைப்பு இன்று கூடி ஆராயும்

### மாவை எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பாகவும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று செவ்வாய்க்கிழமை கூடி ஆராயவுள்ளது.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்துள்ள நிலையில், அந்தத் தீர்மானம் அடுத்த மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தத்தமது கருத்துக்களை முன்வைத்து வருகின்ற

19

## கொக்குவில் பகுதியில் நேற்று வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

### வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு பொருள்களும் அடித்து உடைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியதுடன், அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்தி விட்டுத் தப்பிச்சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. உந்துருளியில் வாள்களுடன் வந்த கும்பலே இந்த அட்டூழியத்தைச் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 3 உந்துருளிகளில் வந்த 9 பேரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வீட்டில் இருந்த தொலைக்காட்சிப்

19

## ஷாபிக்கு எதிராக இதுவரை 1060 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 18

குருணாகல் போதனா மருத்துவனையின் மகப்பேற்று மருத்துவர் சேகு சியாப்தீன் மொஹமட் ஷாபி தொடர்பில் விசாரிப்பதற்கு சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட குழு, கருக்கலைப்பு மற்றும் மகப்பேற்றைத்

19





# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். சனி பெயர்ச்சி அடைய இன்னும் 6 மாதங்கள் இருந்தாலும் அவரது சஞ்சார பலன், பார்வை பலன் ஆறு மாதத்திற்கு முன்பு இருந்தே தொடங்கி விடும் என்பதால் இந்த பலன்கள்.

இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு, மகரம் , கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரை சனியில் இருந்து விடுபடுகிறீர்கள். மிதுனம் ராசிக்காரர்களுக்கு கண்டச்சனி முடிந்து அஷ்டமத்து சனி ஆரம்பிக்கிறது.



## மிதுனம்

மிதுனம் ராசிக்காரர்களே சனிபகவான் கடந்த 30 மாதங்களாக 7ஆம் இடத்தில் கண்ட சனியாக உங்களை வாட்டி வதைத்து ஒரு வழி பண்ணிவிட்டார் என்றாலும் ஒரு சில நன்மைகளும் இல்லாமல் இல்லை. இனி அவர் அஸ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது சற்று குறைவான பலன்களையே அளிப்பார் என்று கூற வேண்டும். கடந்த 30 மாதங்களாகக் கஷ்டப்பட்டு, அல்லல்பட்டு ஒருவழியாக மீண்டு வரலாம் என்று நினைத்திருப்பீர்கள். அடுத்த 30 வருடத்துக்கு மிகப்பெரிய மாற்றமாக அஷ்டமத்து சனி ஆரம்பிக்கிறது.

**வருமானம் அதிகரிக்கும்**

கவலை வேண்டாம் பணவரவு அதிகமாக இருக்கும் காரணம் சனி பகவான் தனது ஏழாவது பார்வையால் உங்கள் ராசிக்கு இரண்டாம் வீடான தன, குடும்ப ஸ்தானத்தை பார்க்கிறார். சக ஊழியர்களின் அன்பும் ஆதரவும் கிட்டும்.

**கூட்டுத்தொழிலில் வெற்றி**

உங்களது ராசிக்கு 8ஆம் இடத்தில் அமரும் சனிபகவான் ராசிக்கு 10ஆம் இடத்தை சனிபகவான் பார்க்கிறார். தொழிலில் எதிர்பார்த்த லாபம் ஓரளவு வந்து சேரும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகள் நன்மை அடைவர்.

பங்கு சந்தையில் அதிக கவனம் தேவை. சுய தொழிலில் ஓரளவு லாபம் ஏற்படும். கூட்டுத்தொழி லில் கூட்டாளிகளுக்குள் தேவையற்ற மன வருத்தங்கள் ஏற்பட்டு விலகும். நுழைவு விசா போன்ற விடயங்களில் தடையேற்பட்டாலும் அதனால் நன்மையேயாகும்.

**வேலையை விட வேண்டாம்**

அரச வேலையில் இருப்பவர்கள் வேலையில் கவனம் தேவை. அரச விடயங்களில் அதிக எச்சரிக்கை தேவை. எதிலும் நிதானமாக கையாளுதல் வேண்டும். உயரதிகாரிகளால் தண்டிக்கப்பட வாய்ப்புண்டு. எதிர்பார்த்த வேலை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் முதலில் கிடைத்த வேலையில் அமர்ந்து பின் பிடித்த வேலையை தேடுதல் வேண்டும். வேலையில் திருப்தியற்ற சூழ்நிலைக்காக அவசரப்பட்டு வேலையை விட்டுவிடுதல் கூடாது.

**பொறுமை அவசியம்**

உங்கள் ராசிக்கு எட்டு, ஒன்பதாம் அதிபதியான சனி பகவான் அவரது வீடான மகரம் ராசியில் ஆட்சி பெற்று அமரப்போகிறார். சனிபகவான் மிதுனம் ராசிக்காரர்களுக்கு கெடுதல் செய்ய மாட்டார் நன்மையே செய்வார்.

எட்டாம் வீட்டில் சனிபகவான் சஞ்சாரம் செய்வது சற்று மனவருத்தங்களையும் போராட்டங்களையும் எடுத்த காரியத்தில் தடையும் உண்டு பண்ணுவார். தேவையற்ற விடயங்களில் தலையிடக் கூடாது. எல்லாவற்றிலும் பொறுமையாக இருந்தால் நன்மையே நடக்கும். எதிலும் தலைமையேற்று நடத்துவதை சற்று தள்ளிப் போட்டு விட்டு, மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடவுங்கள்.

**எதிர்பாராத வருமானம்**

பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. பத்திரங்கள், நகைகள் இவைகளை பத்திரமாகக் கையாளுதல் வேண்டும். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க வேண்டி வரும். வட்டி பெரிய அளவில் கட்ட வேண்டி வரும். அதே சமயம் இதுவரை கொடுத்து வைத்திருந்த வராத பணங்கள் பொருள்கள் தவணை முறையில் எதிர்பாராத விதமாக வந்து சேரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.

**குழந்தை செல்வம்**

சனிபகவானின் பார்வை உங்க ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தின் மீது விழுகிறது. இதுநாள் வரை குழந்தை பாக்யம் இல்லாதவர்களுக்கு தடைகள் ஏற்பட்டு பின் சுபகாரியம் நடக்கும். சிலருக்கு குழந்தைகளால் தேவையில்லாத பிரச்சினைகளும் அவர்களால் தேவையற்ற குழப்பங்களும் வரும். குழந்தைகளை எச்சரிக்கையாக கண்காணியுங்கள்.


**பெண்கள் கவனம்**

பெண்களே அஷ்டமத்து சனி காலத்தில் எதையும் பொறுமையாக கையாளுங்கள். அடுப்பங்கரையில் கவனமாக இருங்கள். நெருப்பு காயங்கள் ஏற்படும். அம்மாவின் உடல் நலனில் அக்கறை காட்டுங்கள். லேசான உடல் நலப்பிரச்சினைகளையும் கண்காணித்து மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

**ஆலய தரிசனம் மன அமைதி தரும்**

அடிக்கடி ஆலயதரிசனம், சாமி தரிசனம், பெரியவர்களை மதித்துப்போற்றி வணங்கி வர அஷ்டம சனியின் தாக்குதலிருந்து எளிதில் மீண்டு வந்து வெற்றி பெற சந்தர்ப்பம் அமையும். தந்தையாரின் உடல்நலத்தில் அதிக கவனம் தேவை.

# எந்த நாள்களில் எண்ணெய் தேய்த்து குளிக்கக் கூடாது



பொதுவாக எம்மில் பலருக்கும் ஞாயிறன்று விடுமுறை என்பதால் அன்று எண்ணெய் தேய்த்து குளிக்கின்றனர். ஆனால் அது தவறு.

"ஞாயிற்றுகிழமை கழுதை கூட எள்ளு காட்டு பக்கம் போகாது" என்பது பழமொழி. சனி நீராடு என்பதும் பழமொழி. நீங்கள் பிறந்த நட்சத்திரம், திகதி, கிழமைகளில், குளிக்க கூடாது என்பது ஐதீகம்.

பொதுவாக, ஆண்கள் புதன் மற்றும் சனி கிழமைகளில் குளிப்பது உசிதம். ஏனென்றால் சனி பகவான் அசதி, சோம்பேறித்தனம் நிறைந்த தமோ குணத்தின் அதிபதி.

எனவே எண்ணெய் குளி
யல் முடிந்த பின் மனிதனின் சுறுசுறுப்பு குறைந்து அசதியும், உறக்கமும் ஏற்படும்.

இதே போன்று பெண்கள் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து குளிக்கலாம். பெண்களுக்கு சனியை விட சுக்ரனின் உதவி அதிகம் தேவை. மேலும் செவ்வாயும், வெள்ளியும் பெண்களுக்கு உகந்த கிரகங்களின் நாட்கள். எனவே இந்தக் கிழமைகளில் பெண்கள் எண்ணை தேய்த்துக் குளித்தல் நலம்.

இதேபோல் காலை 8 மணிக்கு முன் மற்றும் மாலை 5 மணிக்குப் பின் எண்ணெய் தேய்த்து குளிக்க கூடாது.

சின்ன மேகமே சின்ன மேகமே
இங்கிலாந்தில் மழை வீசு சின்ன மேகமே

நம்ம நிலை அஞ்சாப் போச்சு
பொயின்ட்ஸ் எடுத்து நாளுமாச்சு
மின்னல் வெட்டி கும்மி கொட்டு சின்ன மேகமே

சின்ன மேகமே சின்ன மேகமே
இங்கிலாந்தில் மழை வீசு சின்ன மேகமே

விண்ணோடு மேளச் சத்தம் என்ன
மண்ணோடு சின்ன தூறல் என்ன
எங்கேதான் சென்றாலும் இப்போது வருவாயோ
இந்தியாவுக்கு வந்தது போல் நில்லாமல் போவாயோ
தப்பாமல் மீண்டும் சந்திப்பாயோ.... பாயோ

நீ வரும் போது பொயின்ட்ஸ் எடுப்பேனே...
நீ வரும் போது பொயின்ட்ஸ் எடுப்பேனே...



twitter



# துருவ் நடிக்கும் 'ஆதித்யா வர்மா' படத்தின் முன்னோட்டக்காணொலி வெளியானது

தெலுங்கில் மாபெரும் வெற்றி பெற்ற 'அர்ஜுன் ரெட்டி' படத்தை விக்ரம் மகன் துருவ்வை நாயகனாக அறிமுகப்படுத்தி 'வர்மா' என்ற பெயரில் பாலா இயக்கினார்.

வர்மா படப்பிடிப்பு முடிந்து வெளியீட்டுக்குத் தயாரான நிலையில், படம் கைவிடப்படுவதாக படக்குழு அறிவித்தது. இதையடுத்து 'வர்மா' படத்தின் புதிய பதிப்பை அர்ஜுன் ரெட்டி இயக்குநர் சந்தீப் ரெட்டி வங்காவிடம் உதவியாளராக பணியாற்றிய கிரிசய்யா இயக்கியிருக்கிறார்.

"ஆதித்யா வர்மா" என்ற பெயரில் உருவாகி வந்த இந்த படத்தில் துருவ் ஜோடியாக பாலிவுட் நடிகை பனிதா சந்து நடித்துள்ளார்.

மேலும் பிரியா ஆனந்த் மற்றும் புதுமுகங்கள் பலரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு ரவி கே. சந்திரன் ஒளிப்பதிவு செய்ய, அர்ஜுன் ரெட்டி புகழ் ரதான் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் பிடிப்பு முடிந்துவிட்ட நிலையில் பின்னணி வேலைகளில் படக்குழு மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது ஆதித்ய வர்மா படத்தின் முன்னோட்டக் காணொலி படக்குழு வெளியிட்டுள்ளது. இரண்டாவது முறையாக மறுதயாரிப்பு செய்யப்பட்டு வெளியாகியிருக்கும் இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலியைப் பார்வையிட்டு பலரும் பாராட்டி வருகின்றனர்.

சுவாரஸிய தகவல்



# இதுதான் நட்பு

ஒரே வகுப்பில் படித்த இருவர் நீதிமன்றத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள். ஒருவர் நீதிபதியாக, மற்றவர் குற்றவாளியாக.

தீர்ப்பு வழங்குமுன் அங்கிருந்த பெண் நீதிபதி நீங்கள் Nautilus Middle என்ற கல்லூரியில் என்னோடு ஒன்றாகப் படித்த நண்பர்தானே என்று குற்றவாளியுடன் அறிமுகமாகின்றார்.


தனது பாடசாலை நண்பிதான் நீதிபதி என்று அறிந்து கொள்ளும் குற்றவாளி கண்ணீர்விட்டு அழுகிறார்.

பின்னர் அந்த பெண் நீதிபதி : உங்களை இப்படி சந்திக்கக் கிடைத்ததை எண்ணி நான் மிகவும் வருத்தமடைகிறேன்.

எமது கல்லூரியில் இருந்த சிறந்த Foot Ball வீரர் இவர். கல்லூரிக் காலத்தில் மிகத் திறமையான மாணவர் என்று அந்த குற்றவாளி நண்பரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினார் நீதிபதி.

அதோடு உங்களது பாதையை மாற்றிக் கொள்ளுங்கள் என்று கூறி தனது நண்பருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

ஒரு நல்ல நிலமைக்கு வந்ததும் ஒன்றாக இருந்த நண்பர்களை கண்டும் காணமல் இருப்பவர்களுக்கு மத்தியில் ஒரு நீதிபதியாக இருந்து கொண்டு ஒரு குற்றவாளியை தனது நெருங்கிய நண்பர் என்று அறிமுகம் செய்த அந்த பெண் நீதிபதியின் பண்பு அழகானது.















# பிறந்த நாள் பரிசு



மன்னர் கிருஷ்ணதேவராயருக்குப் பிறந்தநாள் விழா. நகரமெல்லாம் தோரணம், வீடெல்லாம் அலங்காரம்! மக்கள் தங்கள் பிறந்த நாள் போல மன்னரின் பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர். முதல்நாள் இரவே வீதிகள் தோறும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள், அரண்மனையில் வெளிநாடுகளிலிருந்து வந்த தும்துவர்களுக்கு விருந்து ஏகதடபுடலாக நடந்தது.

மறுநாள் அரச சபையில் அரசருக்கு மரியாதை செலுத்துதல் நடந்தது. முதலில் வெளிநாடுகளிலிருந்து வந்த அரச பிரதானிகள், தங்கள் நாட்டு மன்னர்கள் அனுப்பிய பரிசுகளைத் தந்தனர்.

பிறகு அரச பிரதானிகள், பொதுமக்கள், மன்னருக்கு பரிசளித்து மரியாதை செலுத்தினார்கள். அதன்பிறகு அரசரின் நெருங்கிய நண்பர்கள் தங்கள் பரிசுகளை அளித்தனர். அப்போதுதான் பெரியதொரு பொட்டலத்துடன் தெனாலிராமன் உள்ளே நுழைந்தான். அரசர் உள்பட எல்லாரும் வியப்போடு பார்த்தனர்.

மற்றவர்களிடம் பரிசுகளை வாங்கித் தன் அருகே வைத்த மன்னர், தெனாலிராமன் கொண்டு வந்த பரிசுப் பொட்டலம் மிகப் பெரிதாக இருந்ததால் அவையிலுள்ளவர்கள் ஆவலோடு என்ன பரிசு என்று பார்த்ததால் அந்தப் பொட்டலத்தைப் பிரிக்கும்படி தெனாலிராமனிடம் கூறினார் அரசர்.

தெனாலிராமன் தயங்காமல் பொட்டலத்தைப் பிரித்தான். பிரித்துக் கொண்டே இருந்தான். பிரிக்கப் பிரிக்கத் தாழைமடல்கள் காலடியில் சேர்ந்தனவே தவிர பரிசுப் பொருள் என்னவென்று தெரியவில்லை.

அதனால் எல்லாரும் ஆவலுடன் கவனித்தனர். கடைசியில் மிகச்சிறிய பொட்டலமாக இருந்ததைப் பிரித்தான். அதற்குள் நன்றாகப் பழுத்துக் காய்ந்த புளியம்பழம் ஒன்றிருந்தது.

அவையினர் கேலியாகச் சிரித்தனர்.

அரசர் கையமர்த்திச் சிரிப்பு அடங்கியவுடன், "தெனாலிராமன் கொடுத்த பரிசு சிறிதாக இருக்கலாம். அதற்கு அவன் கொடுக்கப் போகும் விளக்கம் பெரிதாக இருக்கலாமல்லவா?" என்று அவையினரைப் பார்த்துக் கூறிவிட்டு தெனாலிராமன் பக்கம் திரும்பி, "ராமா இந்த சிறிய பொருளைத் தேர்ந்தெடுத்ததின் காரணம் என்ன?" எனக் கேட்டார்.

"அரசே, ஒரு நாட்டை ஆளும் மன்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் பழம் புளியம்பழம் ஒன்று தான். மன்னராக இருப்பவர் உலகம் என்ற புளிய மரத்தில் காய்க்கும் பழத்தைப் போன்றவர். அவர் பழத்தின் சுவையைப் போல இனிமையானவராக இருக்க வேண்டும்.

"அதே நேரத்தில் ஆசாபாசங்கள் என்ற புளியம்பழ ஓட்டில் ஒட்டாமலும் இருக்க வேண்டும் என்பதை விளக்கவே இந்த புளியம்பழத்தைப் பரிசாகக் கொண்டு வந்தேன். புளியம்பழமும் ஓடும்போல இருங்கள்!" என்றான்.

அவையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மன்னர் கண்கள் பனிக்க ஆசனத்தைவிட்டு எழுந்து தெனாலிராமனைத் தழுவி, "ராமா எனக்குச் சரியான புத்தி புகட்டினாய். ஒரு பிறந்த நாள் விழாவிற்கு இத்தனை ஆடம்பரம் தேவையில்லை.

"பொக்கிஷப் பணமும் பொது மக்கள் பணமும் வீணாகும்படி செய்து விட்டேன். உடனே விசேடங்களை நிறுத்துங்கள். இனி என் பிறந்தநாளன்று கோயில்களில் மட்டுமே அர்ச்சனை ஆராதனை செய்யப்பட வேண்டும். அவசியமில்லாமல் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யக்கூடாது." என உத்தரவிட்டார்.

தெனாலிராமனின் துணிச்சலையும் சாதுரியத்தையும் எல்லாரும் பாராட்டினர்.

அரசர் தனக்கு வந்த பரிசுப் பொருள்களில் விலை உயர்ந்தவற்றைத் எடுத்து தெனாலிராமனுக்குப் பரிசாகத் தந்தார்.


# மார்ட்டின் லூதர்கிங்



பஸ்வண்டிகளில் வெள்ளையர்கள் ஏறினால் உட்காந்திருக்கும் கறுப்பர்கள் எழுந்து அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று முன்னர் அமெரிக்காவில் ஒரு சட்டம் நடைமுறையில் இருந்தது. இந்தச் சட்டத்தை ரோபாக்ஸ் என்ற கறுப்பினப் பெண்மணி எதிர்த்ததால் பஸ்ஸிலிருந்து பலாத்காரமாக இறக்கப்பட்டு தாக்கப்பட்டார். அமைதிக்கும் பங்கம் விளைவித்தாக மன்றத்தில் அவருக்கு 14டொலர் தண்டமும் விதிக்கப்பட்டது.

இதை எதிர்தது அமெரிக்க கறுப்பர்கள் போர்க்கொடி தூக்கினார்கள். நீண்ட துரத்திலுள்ள அலுவல்களுக்குக் கூட நடந்தே சென்றார்கள். மாட்டின் லூதர் கிங் என்ற கறுப்பின பாதிரியார் இந்தப் போராட்டத்துக்கு தலைமை தாங்கினார். 381நாள்களாக தொடர்ந்த அந்தப் போராட்டத்தின் பின் கறுப்பர்களும் பஸ் வண்டிகளில் விரும்பிய இடத்தில் இருக்கலாம் என்று அரசு சட்டம் நிறைவேற்றியது. 1964இல் மாட்டின் லூதர் கிங்குக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1968ஆம் ஆண்டில் கொடியவன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவர் உயிரிழந்தார்.

## வர்ணம் தீட்டுவோம்




## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
07 . 01 . 1934



மறைவு
20 . 05 . 2019

கடந்த 20.05.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர்**
**சுப்பிரமணியம் ஜெயபாலசிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (19.06.2019)
புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மாசாந்திப்
பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும்
கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உள்நாடு, வெளிநாடுகளில்
இருந்து அனுதாபங்களை தெரிவித்தவர்களிற்கும் மற்றும்
பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின்
சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை த்னிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

இல.45, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## இணுவில் கந்தசுவாமி கோவில்
## 12 ஆம் திருவிழா மஞ்சத் திருவிழா விஞ்ஞாபனம்



* நிகழும் விகாரி வருடம் ஆனி மாதம் 4 ஆம் நாள் (19.06.2019) புதன்கிழமை காலை 7.00 மணி சண்முகப்பெருமானிற்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.
* நண்பகல் 12.00 மணிக்கு விநாயகர், வள்ளி, தெய்வானை சமேதரராய் முத்துக்குமாரசுவாமிப் பெருமான் உள்வீதியுலா வருவார்.
* பிற்பகல் 1.00 மணிக்கு பகல் திருவிழா நிறைவுபெறும்.
* மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி தெடர்ந்து சண்முக அர்ச்சனை நடை பெறும்
* மாலை 6.30 மணிக்கு பிள்ளையார், சிவன் - பார்வதி வள்ளி, தெய்வானை சமேதரராய் சண்முகப்பெருமான் திருமஞ்சத்தில் எழுந்தருளுவார்.
* அடியார்கள் அனைவரும் திருமஞ்சக்காட்சியைக் கண்டு சண்முகப் பெருமானின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**12 ஆம் திருவிழா உபயகாரர்களும் தர்மகர்த்தா சபையினரும்**

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் தங்குவதற்கு வசதிகளினையுடைய வீடுகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன. வீடு வைத்தியசாலையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் சுற்று வட்டாரத்துக்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்குத் தர விரும்புபவர்கள் மேலதிக தகவல்கள் அடங்கிய படிவத்தை அலுவலகத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து பின்வரும் விலாசத்துக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ மாத வாடகையுட்பட விவரங்களை மூடிய கடித உறையில் 28.06.2019 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கு அமைவாக வாடகை வழங்கப்படும்.

**வகை 1:- 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு**
**வகை 2:- 2 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு**

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

University of Jaffna will entertain applications to reach us on or before 01.07.2019 from qualified Sri Lankan Nationals for the under mentioned Temporary posts.

**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in
**Human Resource Management / Accounting / Marketing / Financial Management / Commerce**

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours; OR
2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours; OR
3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, AND (b) a recognized post-graduate degree in the relevant subject

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 45,092 p.m (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 37,010 p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application forms and other details will be available in the Faculty of Management Studies & Commerce website. Downloaded application forms should accompany with the paid Bank Slip for deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.


Application forms and other details may be obtained from the Office of the Dean, Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self- addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

Those who wish to apply for more than one post should submit separate application for each. Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**Registrar,**
**University of Jaffna,**

# பிறப்பு முதல் வாழ கற்றுக் கொடுக்கும் அம்மா

ஒட்டகச் சிவிங்கி நின்று கொண்டு குட்டி போடும் பழக்க முடியாது. தாயின் பின்புற எட்டடி உயரப் பகுதியில் இருந்து கருவறையை விட்டு குட்டி வெளியேறி நிலத்தில் அடிபட்டுக்கொண்டே விழும். இதன் பின்னர் தாய் தன் அடிபட்டு விழுந்த குட்டியின் கழுத்தை மென்மையாக முத்தமிடும். பின் தன் நீண்ட கால்களால் ஓங்கி உதைக்கும் குட்டியானது காற்றில் பறந்து சற்று தள்ளிப் போய் விழும். முன்னதாகவே தாயின் கருவறையில் இருந்து விழும் போது முதல் அடி



கிடைத்தது. இந்த வலி ஆறுவதற்குள் தாயின் காலால் உதைபடும் வலியும் சேரும். ஆனால் குட்டி முயற்சி செய்து எழுந்திருக்க முனைகையில் மறுதரமும் தாய் அதனை உதைக்கும். அது மீண்டும் விழும். பின் எழ முயற்சிக்கும். சுயமாக குட்டி தானாக எழுந்து நிற்கும் வரை தாய் உதைத்துக் கொண்டே இருக்கும்.

காட்டில் உலவும் சிங்கம், புலி, ஓநாய் போன்ற விலங்குகளுக்கு ஒட்டகச் சிவிங்கியின் மாமிசம் மீதும் அலாதி பிரியம். நடக்கத் தெரியாத குட்டியாக இருந்தால் இவை அந்த விலங்குகளுக்கு இரையாகி விடும் என் பயப்படும் தாய் தன்னுடைய குட்டியை உதைத்து எழுந்து நடப்பதற்கு கற்றுக்கொடுக்கிறது.

ஓரிரு நாள்களில் குட்டி எழுந்து நடந்து விடுகிறது. இந்த உலகில் மற்ற உயிர்களோடு போட்டி போட்டு உயிர் வாழ வேண்டுமென்றால் வலியைத் தாங்கிக் கொண்டு போராட வேண்டும் என்ற உண்மையை பிறந்த நாள் முதலேயே தன்னுடைய குட்டி களுக்கு ஒட்டகச் சிவிங்கி கற்றுக்கொடுக்கிறது. முதலேயே தன்னுடைய குட்டிக ளுக்கு ஒட்டகச்சிவிங்கி கற்றுக்கொடுக்கிறது. குட்டி ஒட்டகச் சிவிங்கி கீழே விழுந்த வலி தீரும் வரை ஓய்வு எடுத்திருந்தால் மற்ற காட்டு விலங்குகளுக்கு இரையாகி விடும். ஆனால் அதன் தாய் வலியைத் தாண்டி வெற்றியைப் பெறும் சூட்சுமத்தை தன்னுடைய குட்டிக்குச் சொல்லிக் கொடுத்து சூழ்நிலைக்கேற்ப வாழ்வை வாழ்வதற்கு பழகிக்கொடுக்கிறது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

நெஞ்சம் மகிழ 13 . 07 . 1969



நெஞ்சம் நெகிழ 20 . 05 . 2019

### அமரர் யோகலிங்கம் கேதீஸ்வரன்
**(B.Sc, PGDE, M.Sc, SLTS -1)**
**(ஆசிரியர், யா/ வியாவில் சைவவித்தியாலயம், காரைநகர்)**

பெற்ற தாயை பேதலிக்கவிட்டு விட்டு
கட்டிய மனைவியைக் கதறியழவிட்டு விட்டு
பெற்ற பிள்ளைகளைப் பேசாமடந்தை ஆக்கிவிட்டு
உற்ற உடன்பிறப்புக்களை ஏம்பித் தவிக்க விட்டுவிட்டு
ஒருநொடிப் பொழுதில் பெருமாள் சரண் அடைந்ததேனோ?
உங்கள் திருமுகத்தை இனி எப்போ காண்போம் நாம்!

கடந்த 20.05.2019 அன்று காலமான எமது குடும்பத் தலைவர் அமரர் யோ.கேதீஸ்வரன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.06.2019) செவ்வாய்க்கிழமை வேம்படியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறுகின்றது. இதனை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவர் சுகயீனம் உற்றவேளை உதவிய மருத்துவர்கள் மருத்துவ தாதியர்களுக்கும். கண்ணீர் அஞ்சலி செலுத்திய பாடசாலை அதிபர்கள். ஆசிரியர்கள். மாணவர்களுக்கும். பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்திய பாடசாலைகளுக்கும். துண்டுப்பிரசுரம். பதாகைகள். பூச்செண்டுகள் வழங்கியவர்களுக்கும். வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும். தொலைத் தொடர்பு கொண்டோருக்கும். இறுதி நிகழ்வில் இரங்கலுரை வழங்கியோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வேம்படி, காரைநகர்.** **குடும்பத்தினர்.**

# REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
## Procurement of Office Equipment, Stationary & Building Construction

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
- 01) Office Equipment
- 02) Building Construction and renovation
- 03) Stationary Item

B. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

C. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
- 01) Bidders shall have valid business registration
- 02) and business registration for supply of respective Works, Supplies and Service
- 03) Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance Circular No 4/2016(11)

D. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna (021 2222278/4557. ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

E. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non refundable fee** as specified in the table by cash on working days from 19.06.2019 to 02.07.2019 during 09.00 Hours to 15.00 Hours.

F. Bids must be delivered on or before 10.00 Hours of 03.07.2019 to the address given below or deposited in the tender box available at the Room of **Additional Regional Director of Finance**. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives

G. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening

H. Pre bid meeting under following on 28.06.2019 at 10.00am in RDHS Office Jaffna
- 01) Table I – 10.00am
- 02) Table II – 11.00am
- 03) Table III – 11.30am

I. Procument committee will be the right to make final dicision in regard the accept or reject Bids

**Table I - Office Equipment**

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/PSDG/OE/2019/01 | Air Conditioner 12000BTU | 06 | 1000.00 | 30,000.00 |
| | Air Conditioner 18000BTU | 06 | | |
| | Air Conditioner 24000BTU | 04 | | |
| NP/RDHS/PSSP/PSDG/OE/2019/03 | Beds - Steel | 23 | 1000.00 | 20,000.00 |
| | Mattress (Steel bed) | 23 | | |
| | Mattress Cover (water proof) | 23 | | |
| | Mattress single | 25 | | |
| | Wooden bed single | 25 | | |
| | Hospital Mattress | 60 | | |
| | Chipboard to bed | 30 | | |
| | Plastic Chairs arm | 20 | | |
| | Plastic Chairs | 70 | | |
| | Revolving Chairs | 20 | | |
| | Visitors Chairs | 35 | | |
| | Plastic Table | 02 | | |
| | Wooden Table | 30 | | |
| | Wooden Chair | 30 | | |
| | Office Table | 20 | | |
| NP/RDHS/PSSP/PSDG/OE/2019/05 | Ceiling Fan | 15 | 1000.00 | 10,000.00 |
| | Stand Fan | 03 | | |
| | Refrigerator | 08 | | |
| | Water filter | 12 | | |
| | Water Filter RO system | 04 | | |
| | Water Tank 500ml | 02 | | |
| | Water Tank 1000ml | 02 | | |

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/PSDG/OE/2019/02 | Computer | 11 | 1000.00 | 80,000.00 |
| | Photocopy Machine | 08 | | |
| | Printer | 08 | | |
| | Laptop | 26 | | |
| | Multimedia Projector | 03 | | |
| | UPS | 02 | | |
| | Barcode Reader | 25 | | |
| | Wireless Black ink – Tank Printer | 03 | | |
| | Lable Printer | 03 | | |
| | Laminating Machine | 03 | | |
| NP/RDHS/PSSP/PSDG/OE/2019/04 | Almyrah Steel | 55 | 1000.00 | 40,000.00 |
| | Filling Cabinet | 03 | | |
| | Glass front Cabinet | 15 | | |
| | White Board 2'x3' | 03 | | |
| | Stool | 06 | | |
| | Airport Chair | 18 | | |
| | Cloth Rack | 30 | | |
| | Computer Table | 02 | | |
| | Dining Table | 10 | | |

**Table II - Building Construction and Renovation**

| Tender No | Work Item | ICTAD Registration Required | Non Refundable Tender Fee | Bid Security | Basic Cost Estimate (Millions) |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/2019/Build/05 | 01. Completion of Generator Room at DH Karaveddy<br>02. Extention of EU at DH Maruthankeny<br>03. Renovation of Gramodaya Health centre Chempiyanpattu<br>04. Renovation of Gramodaya Health centre Uduthurai<br>05. Renovation of Gramodaya Health centre Kudaththanai | C8 or C 7 (Buildings) | 1,000.00 | 30,000.00 | 2.25Mn |
| NP/RDHS/PSDG/2019/Build/06 | 01. Renovation of MOH Uduvil<br>02. Renovation of roof repair at GHC Anaikoddai<br>03. Construction of Midwife Quarters Boundry wall at DH Manipay | C8 or C 7 (Buildings) | 1,000.00 | 30,000.00 | 2.50Mn |
| NP/RDHS/PSDG/2019/Build/07 | 01.Renovation of MOH Office at Pointpedro | C 9 and C8 or above (Building) | 1,000.00 | 20,000.00 | 1.9Mn |
| NP/RDHS/PSSP/2019/03 (recall) | 01.Renovation of Building at PHC Pannakam<br>02.Temporary Shed at MOH Chavakachery<br>03.Partition Work at PMCU Mandaitivu | C 9 and C8 or above (Building) | 1,000.00 | 10,000.00 | 0.74Mn |

**Table III - Stationary**

| Reference No | Item | Non refundable fees | Limitation for Bid |
|---|---|---|---|
| NP/RDHS/Stationary/2019/ | Stationary Item | 1000.00 | Business Registration with in Jaffna District |

**Chairperson**
**Regional Procurement Committee**
**RDHS Office, Jaffna.**

## பதில்...

மேற்கொள்ளப்பட்ட பதில் அமைச்சர்கள் நியமனங்கள் அரசமைப்பு மீறல் என்பதாலேயே தலைமை அமைச்சர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கட்சியின் ஒப்புதலைப் பெறாமல் இந்த நியமனங்களை ஏற்றுக்கொண்டதால், எந்தவொரு சூழ்நிலையிலும் அவர்களின் நடவடிக்கை அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்று ஐ.தே.க. தலைமை அறிவுறுத்தியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அமைச்சர்களாக இருந்து பதவி விலகிய ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், கபீர் ஹாசிம் ஆகியோரது இடங்களுக்கே, பதில் அமைச்சர்களாக லக்கி ஜயவர்த்தன, புத்திக பத்திரன, அனோமா கமகே ஆகியோரை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். அந்த நியமனங்கள் தொடர்பாக தலைமை அமைச்சருடன், அரச தலைவர் கலந்துரையாடவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதில் அமைச்சர்களின் நியமனங்கள் சட்டரீதியானது அல்ல என்பதால், அவர்களை புதிய பொறுப்புகளில் பணியாற்ற வேண்டாம் என்றும், இந்த நியமனங்கள் தொடர்பாக அரச தலைவருக்கு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நிலைமையால் இன்று அமைச்சரவைக் கூட்டம் நடக்கவுள்ள நிலையில், பதில் அமைச்சர்கள் அதில் பங்கேற்பார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. (எ)

## காணியை...

தித் தர வேண்டும் என்று மருமகன் கேட்டுள்ளார். அந்தக் காணியைத் தர முடியாது என்று அந்தப் பெண் மறுத்துள்ளார். காணியை எழுதித் தர வேண்டும் என்று வற்புறுத்தி மருமகன் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று அயலவர்கள் கூறுகின்றனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

### தேவை
கோண்டாவிலில் இயங்கும் ஸ்ரூடியோவுக்கு பெண் வேலையாள் தேவை.
T.P - 077 248 7442

### வேலையாள்கள் தேவை
*சாரதி - (AD வாகன அனுமதிப்பத்திரம்)
*கணக்காளர் - (கணக்கியல் அனுபவமுள்ள பெண்பிள்ளை தேவை)
0761449918

### வீடு வாடகைக்கு தேவை
பரமேஸ்வராச் சந்தியிலிருந்து பலாலி வீதியில் அல்லது அதற்கு அண்மித்த கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்டதாக அமைதல் விரும்பத்தக்கது (ஆசிரியராக பணிபுரியும் ஒருவரது குடும்பத்திற்கு) 077 6727941

### சிறுநீரகம் தேவை
இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள ஒருவருக்கு O,A வகைக்குருதியுடைய சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. (CS 26105)(04.17)
077 650 6022/ 077 641 2839

### வேலையாள்கள் தேவை
கச்சேரிக்கு அண்மித்த பகுதியில் **Packing**. கடையில் விற்பனையாளர் வேலைகளுக்குப் பெண் வேலையாள்கள் தேவை. (CS/26095)(11.17)
021 221 1179/ 077 790 8263

# தவறான முடிவெடுத்து ஒருவர் சாவு

சாவகச்சேரி, ஜூன் 18

ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு நிலையியல் அலுவலர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று சாவகச்சேரி கற்குளி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் பாலச்சந்திரன் (வயது-63 ) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மூலம் விசாரணையை நடத்தி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸார் க்கு உத்தரவிட்டார். (எ9,159)

# ஸஹ்ரானுடனான ஒப்பந்தத்தை வெளிப்படுத்த வேண்டும் மு.கா.

## பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 18

தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் என்ன ஒப்பந்தம் செய்துக் கொண்டது என்பதை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாடாளுமன்ற தெரிவு குழுவின் செயற்பாடுகள் ஒருதலைபட்சமானது என்பது தெளிவாக தெரிந்து கொள்ளமுடிகின்றது. தெரிவு குழுவில் சாட்சியமளிப்பவர்களிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை மையப்படுத்தியே கேள்விகள் கேட்கப்படுகின்றன. அரசுக்கு எதிராக குறிப்பிடப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அவை விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

கடந்த நாடாளுமன்ற தெரிவு குழுவில் சாட்சியமளித்த கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் பல விடயங்களை குறிப்பிட்டார். மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலை நடத்திய தற்கொலை குண்டுதாரிகளில் முக்கிய சூத்திரதாரியான ஸஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்துக்கொண்டது என கூறினார்.

ஸஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் என்ன ஒப்பந்தம் செய்துக் கொண்டது என்பதை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும் - என்றார். (எ)

# பொலிஸ் அலுவலர் விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

மோட்டர் சைக்கிள் விபத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் புத்தூர் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் கருணேஸ் (வயது 36) என்ற பொலிஸ் அலுவலரே படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இளவாளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இவர் கடமை நிறைவடைந்து கொடிகாமம் புத்தூர் வீதியால் பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ106,9,159)

# மாகாணத் தேர்தல் தொடர்பான வழக்கு செப்ரெம்பர் மாதத்துக்கு

கொழும்பு, ஜூன் 18

கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 3 மனுக்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் காமினி அமரசேகர உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுக்களின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பிப்பதற்குத் தீர்மானித்த நீதியரசர்கள் குழாம் மனுக்களுக்கு எதிரான நிலைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்களை 4 வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (எ)

# தேரரின் உடல்நிலை மோசம்! முதலுதவிகள் தீவிரம்


கொழும்பு, ஜூன் 18

சாகும் வரை பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்திருந்த கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரரின் உடல்நிலை மோசமடைந்ததால் அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்படுகின்றது என்று நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அம்பாறை, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி, மதகுருமார்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பித்திருந்தனர்.

கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கையின் இந்துகுருமார் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ. க. கு. சச்சிதானந்த சிவம் குருக்கள், கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரெட்ணம், சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்டோர் குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தேரரின் உடல் நிலை நேற்றிரவு மோசமடைந்ததால் அவருக்கு தீவிர முதலுதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-22)




# குற்றங்களைத் தடுப்போம்

பாதுகாப்பாக வாழ்வோம்

நவீன தொழில் நுட்பமும் உத்தரவாதத்துடன் கூடிய கண்காணிப்புக் கமராக்கள்




கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து அவதானிக்கும் வசதி

**Home CCTV Systems**
**AHD 4CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 4 Channel KKBRO
1x 1TB Hard Drive
4 x KKBRO 1.3MP Cameras
1x 100m BNC + Power cable
1x Power supply
Rs 29,900/-

**Home CCTV Systems**
**AHD 8CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 8 Channel KKBRO
1x 1TB Hard Drive
8 x KKBRO 1.3MP Cameras
1x 200m BNC + Power cable
1x Power supply
Rs 44,900/-

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

021 222 5893 / 077 742 5973
077 396 3280 / 071 328 5260
218, Hospital Road, Jaffna.
email: jaffna@micropcsystems.com


# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
21.04.1946

ஆண்டவன் அடியில்
16.07.2011

திதி:-
18.06.2019

## டாக்டர் வேலாயுதபிள்ளை தம்பித்துரை

என்றும்
எப்பொழுதும்
எம் நினைவில்
வாழும் அப்பா

பங்களா வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்:
(நியூ லக்ஸ்மி ஹாட்வெயர்ஸ் - சாவகச்சேரி)

(ACH/628)(11,17)

# மரண அறிவித்தல்



## திருமதி யோகராணி சிவஞானம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி சிவஞானம் (17.06.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிவஞானத்தின் (சுதா பேக்கரி உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், துளசி, வைதேகி, ஐங்கரன், மயூரதாசன், அபிராமி, அம்பிகை, சாம்பவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கருநேசன், சுதர்மன், கீதா, ஜீவரஜனி, நிர்மலச்செல்வன், சஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், துதிதரன், கடம்பேசன், விஷ்ணுபிரியா, சுபராம், குகந்தினி, ஐங்கரனி, கருணிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2019) செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி. றங்கநாயகி நற்குணம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 | 03 |
| 05 | 07 |
| 1947 | 2015 |



திதி. துதியை

அம்மா என்ற சொல்லுக்கு
அர்த்தம் தந்தவள் நீ!
அன்பினைப் பொழிந்து
எம்மை ஆளாக்கியவள் நீ
பிறர் மனம் கோணாமல்
நடந்த உத்தமி நீ!
ஆனால் ஏனோ எமைத் தனியே
தவிக்கவிட்டு சென்றது
மட்டும் நியாயமா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சேமபுலம் வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நீரில் மூழ்குவதால் ஏற்படும் சாவுகளைத் தடுக்கவேண்டும்

கடலில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். மன்னார்மாவட்டத்தில் உள்ளதலைமன்னார்மேற்குப் பகுதியைச் சேர்ந்த இளங்குமரன் அஜேய் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நண்பர்களுடன்விளையாட்டாகப்பொழுதைக்கழிப்பதற்குச் சென்ற சமயத்தில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. இது மட்டும் என்றில்லை, இவ்வாறு நீரில் மூழ்கியதனால் நிகழும் அவலச்சாவுகள் பல வடக்கில் நடக்கின்றன. அதிலும் குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத்தனமாகக் கடலில் அல்லது நீர் நிலைகளில் குளிக்க என்று செல்லும் சமயங்களில் இவ்வாறு அவலச் சாவுகளை எதிர்கொள்வது வாடிக்கையாகிவிட்டது.

வருடாந்தம் இவ்வாறு பல இறப்புக்களைக் காண்பது வாடிக்கையாகிவிட்டது.

நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவில் வாழுகின்றபோதும் நீச்சல் தெரியாததால் நீரில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் இலங்கையில் அதிகம் என்கிறது உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வு. வருடாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாவுகள் நீரில் மூழ்குவதனால் நிகழ்கின்றன என்கின்றன புள்ளிவிவரங்கள். இவற்றில் பெரும்பாலானவை தவிர்த்திருக்கக்கூடிய சாவுகள் என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையில் நிகழும் இறப்புக்களில் பல நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட இறப்புக்கள் என்று உத்தியோகபூர்வமாகப் பதியப்படுவதில்லை என்பதால் இறப்புக்களின் உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பல சமயங்களில் இத்தகைய இறப்புக்கள் இதயக் கோளாறு, அதிர்ச்சி, மூளைப் பாதிப்பு போன்ற காரணங்களால் ஏற்பட்டது என்றே குறிப்பிடப்படுகின்றன என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையில் அழகான பல கடற்கரைகளும் வாவிகளும் குளங்களும் பெரும் கிணறுகளும் ஏராளம் காணப்படுகின்றன. அத்தோடு ஆண்டு முழுவதும் இந்த நீர் நிலைகளில் தண்ணீர் நீராடுவதற்குரிய வெப்பநிலையுடனேயே காணப்படுகின்றது. இதனால் நீராடல் எப்போதும் இலங்கையில் உவப்புக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது. அதனால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நீராடலை அனுபவிப்பது பெருமளவில் நடைபெறுகின்றது. ஒருசுற்றுலாவின் குறிப்பிடத்தக்க அம்சமாக கடல் குளியலோ அல்லது குளம் அல்லது ஆற்றுக் குளியலோ இடம்பெறத் தவறுவதில்லை.


அப்படியிருக்கின்றபோதும் நீந்தத் தெரியாமையால் மூழ்கி இறக்கும் சந்தர்ப்பங்களே அதிகமாக இருக்கின்றன என்பது கவலைக்குரியது. நீச்சல் பற்றிய அடிப்படை அறிவும் கடற்கரை போன்ற இடங்களில் உயிர் காப்புப் படையினர் இல்லாமை போன்ற காரணங்களுமே நீரில் மூழ்குவதால் ஏற்படும் இறப்புக்களுக்குக் காரணங்களாகின்றன.

பாடசாலைகள் கல்வியோடு சேர்த்து வாழ்க்கைக்கான கல்வியாக நீச்சல் போன்ற அத்தியாவசியப் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதும் கரையோரங்களில் உயிர் காப்புப் படையினரைக் கடமைக்கு அமர்த்துவதும் நீரில் மூழ்குவதால் ஏற்படும் இறப்புக்களைக் குறைப்பதற்கு உதவக்கூடும்.

மகிழ்ச்சிக்காகச் செல்லும் சுற்றுலாக்களை சோகமாக்கும் சாவுகளுக்கு இடமளிக்காமல் பாடசாலை மாணவர்களும் அவற்றை அனுபவிக்கக்கூடிய விதத்தில் அனைத்து மாணவர்களுக்கும் நீச்சல் பயிற்சியை அத்தியாவசியமாக்குவது குறித்து கல்விப் புலம் சிந்திக்கவேண்டும். வாழவேண்டிய இளம் சந்ததியின் இறப்பைத் தடுப்பதற்கான முக்கிய வழியாக இது அமையும் என எதிர்பார்க்கலாம்.

# கஜேந்திரகுமாருடன் சேர்ந்து விக்கினேஸ்வரன் சாதிக்கப் போவதென்ன?





இந்துமதி

முன்னாள் வடக்கு முதலமைச்சர் சி.வி. வின்னேஸ்வரனுக்குத் தமது அரசியல் பலம் தொடர்பான பயம் வந்துவிட்டதா? என்ற சந்தேகம் அவரது அண்மைக்கால அரசியல் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது எழுகின்றது.

அவர் கஜேந்திரகுமாருடன் எப்பாடுபட்டேனும் இணைந்து விட வேண்டும் என்ற வெறியுடன் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. அவரது பலவீனத்தை நன்கு புரிந்து கொண்ட கஜேந்திரகுமார் தாமும் விக்னேஸ்வரனும் கூட்டுச் சேருவதாக இருந்தால் சில நிபந்தனைகளை அவர் நிறைவேற்றியே ஆக வேண்டுமென விடாப்பிடியாகக் கூறி வருகின்றார்.

### இவரா மாற்றுத்தலைமை!

ஆரம்பத்தில் சம்பந்தனுக்கு மாற்றான தலைவர் விக்னேஸ்வரனே என சில ஊடகங்களும் அரசியல் வாதிகளும் கூறி வந்த நிலையில் அவர் கஜேந்திரகுமாரின் வாலைப் பிடித்துக்கொண்டு தொங்குவதற்கு முயற்சி செய்வதைப் பார்க்கும் போது வேதனையாகவும் அருவருப்பாகவும் உள்ளது.

வடக்கு மக்களுடன் எந்த விதமான தொடர்புகளையும் கொண்டிராத விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் அமர்த்தி மிகப்பெரிய தவற்றைப் புரிந்தவர் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன். அவரது நீண்ட கால அரசியல் வாழ்வில் இதுவே அவர் புரிந்த தீர்க்க தரிசனமற்ற தவறாகவும் கருதப்படுகின்றது. சம்பந்தனின் கோரிக்கைக்கு மதிப்பளித்து வடக்கு மக்கள் தமது விருப்பு வாக்குகளை விக்னேஸ்வரனுக்கு அமோகமாக வழங்கினார்கள்.

முதலமைச்சர் பதவியில் அமர்ந்த விக்னேஸ்வரன் தமது சுய உருவத்தைக் காட்ட ஆரம்பித்தார். கூட்டமைப்புக்கு எதிரானவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்கு ஆரம்பித்தார். சம்பந்தனுக்குப் பதிலாகத் தாமே மாற்றுத் தலைவராக உருவெடுக்க வேண்டுமென்ற எண்ணமும் அவருக்குள் குடிபுக ஆரம்பித்தது. விக்னேஸ்வரனின் துரோகத் தனத்தைப் புரிந்துகொண்ட தமிழ் அரசுக் கட்சியினர் இவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மாகாண சபையில் கொண்டு வந்தனார். ஆனால் கூட்டமைப்புக்குள் இருந்த சிலர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகச் செயற்பட்டதால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் உற்சாகமடைந்த கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் விக்னேஸ்வரனுக்கு ஆதரவு வழங்குவது போன்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தின. இதைக் கண்ட வின்னேஸ்வரன் தமிழர்கள் அனைவருமே தமக்குப் பின்னால் திண்டு நிற்பதாக நினைத்தார். இதனால் மாற்றுத் தலைமை தொடர்பான சிந்தனை அவரது மனதில் வலுப்பெற்றது. இதனால் கூட்டமைப்பைத் தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்தார்.

### அரசியலில் பேரவை

தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் அரசியல் கலப்புக்கே இடமில்லையென அறிவிக்கப்பட்டது. வின்னேஸ்வரன் அதன் இணைத் தலைவரானார். சில ஊடகங்களும் பேரவைக்கு ஆதரவாகச் செயற்பட்டன. காலப்போக்கில் பேரவை அரசியல் சார்ந்து செயற்பட ஆரம்பித்தது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது இது நிதர்சனமானாது. விக்னேஸ்வரன் கூட்டமைப்பினுள் இருந்துகொண்டே கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இரகசியமான முறையில் தமது ஆதரவைத் தெரிவித்தார்.

> ஆரம்பத்தில் சம்பந்தனுக்கு மாற்றான தலைவர் விக்னேஸ்வரனே என சில ஊடகங்களும் அரசியல்வாதிகளும் கூறி வந்த நிலையில் அவர் கஜேந்திரகுமாரின் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்குவதற்கு முயற்சி செய்வதைப் பார்க்கும் போது வேதனையாகவும் அருவருப்பாகவும் உள்ளது.

பல்வேறு காரணங்களால் இந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சிறிது சரிவு ஏற்பட்டது. இதைக் கண்டு விக்னேஸ்வரன் மட்டில்லாத மகிழ்ச்சி அடைந்தார். இதை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளவும் செய்தார். பின்னர் தமிழ் மக்கள் முன்னணி என்ற பெயரில் புதியதொரு கட்சியையும் ஆரம்பித்தார். இதன் பின்னர் இவர் மேற்கொண்ட செயல் ஒன்று இவரது நம்பகத் தன்மையைக் கேள்விக்குரியதாக்கிவிட்டது. பேரவை உறுப்பினர்களைத் தமது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு இவர் விடுத்த வேண்டுகோள் காரணமாக பலரது எதிர்ப்புக்களையும் இவர் சம்பாதித்துக் கொண்டார். அரசியல் கலப்பற்ற ஒரு அமைப்பின் உறுப்பினர்களைத் தமது கட்சியில் இணைந்துக் கொள்ளுமாறு இவர் கோரிக்கை விடுத்தமை அப்பட்டமான துரோகமாகும். தமது அரசியல் சூனியத்தை அவரே வெளிக்காட்டிக்கொண்டார்.

### கஜேந்திரகுமாருடன் கூட்டு எதற்காக?

தற்போது கஜேந்திரகுமாருடன் இணைந்து கொள்வதற்குத் துடியாய்த்துடிக்கிறார். குமாரின் சைக்கிளில் ஏறிச் சவாரி செய்வதற்குக் கூடத் தாம் தயாராக இருப்பதாகப் பகிரங்கமாகக் கூறுகிறார். அப்படியென்றால் தனிக்கட்சியென்று இவருக்குத் தேவையா? கஜேந்திரகுமாரின் கட்சியில் ஓர் அங்கத்துவராக இணைந்து அவருடன் சேர்ந்து பணியாற்றலாம்தானே! தற்போது தாமும், கஜேந்திரகுமாருடன் இணைந்து செயற்பட்டால் பல விடயங்களைச் சாதிக்க முடியுமெனக் கூறிவருகிறார். தேர்தல்களை மனதில் வைத்துக்கொண்டுதான் அவர் இவ்வாறு கூறுகிறார் என்பதை எந்தவொரு சாதாரண மனிதனும் புரிந்து கொள்வான். முதலமைச்சர் பதவியில் அமர்ந்து இவர் அனுபவித்த சுகங்களை எவ்வாறு எளிதில் மறக்க முடியும்.

வடக்கில் தமிழ் மக்களின் வாழ்க்கையே கேள்விக் குறியாக மாறிக்கொண்டு செல்கின்றது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயப்பகுதியில் நடப்பவை விக்னேஸ்வரனின் கண்களுக்குத் தெரியவில்லையா? நெடுங்கேணியில் தமிழர் நிலங்களை அபகரிப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளும் அவருக்குத் தெரியவில்லையா? அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் பிரதேசங்கள் பறிபோவதையும் இவர்கள் அறியவில்லையா? விக்னேஸ்வரனின் பலவீனம் தெளிவாகத் தெரிகின்றது. அவரால் தனித்து அரசியல் செய்ய முடியாதென்பதும் நன்கு புலப்படுகின்றது.

# வடக்குக்கு விரைவில் 50 தாதியர் நியமனம்

## அமைச்சின் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

**வடக்கு மாகாணத்துக்கு மிகவிரைவில் 50 தாதியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். 9 நோயாளர் காவு வண்டிகளும் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் 100 தாதியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சுகாதார சேவையின் அபிவிருத்தி தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தலைமையில் கொழும்பில் சில நாள்களுக்கு முன்னர் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் வடக்கின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், 5 மாவட்டங்களின் சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் செயலர் ஆகியோருடன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போதே மேற்படி விடயத்தை சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கின் 5 மாவட்டங்கள் தொடர்பிலும் தனித் தனியே கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது மன்னார் மாவட்டத்துக்கு 4 மருத்துவு நிபுணர்களை நியமிக்கவும், 4 நோயாளர் காவு வண்டிகள், 4 மருத்துவக் கருவிகள் மற்றும் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் பிரகாரம் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவிலான விபத்துப் பிரிவு அமைத்தல் என்பன வழங்க இணக்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 100 கிலோ வாட்ஸ் மின் பிறப்பாக்கி ஒன்று, 2 நோயாளர் காவு வண்டிகள் வழங்கவும் மருத்துவர்களை நியமிக்கவும் சம்மதித்தார்.

வவுனியா மாவட்டத்துக்கு மாவட்ட மருத்துவமனையில் உள்ள பிரேத அறையின் சீரமைப்புக்கு 30 மில்லிய னுடன் ஏனைய வசதிகளும் வழங்க இணக்கம் காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அவசர விபத்துப் பிரிவுக்கு திறைசேரி அனுமதி கிடைத்ததும் நிதி வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளில் நோயாளர் காவு வண்டிகள் இல்லாத மருத்துவமனைகளுக்கு அவை வழங்கப்படும். பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குத் தற்போது 35 வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். குடும்ப நல தாதியர்கள் 135 பேருக்கு வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடம் இலங்கை முழுவதும் பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இருப்பினும் முயற்சிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி மருத்துவமனையில் அமைக்கப்படும் அவசர விபத்துப் பிரிவின் பணிக்கு மேலதிகமாக தேவைப்படும் 40 மில்லியன் ரூபா வழங்க இணக்கம் கானப்பட்டபோதும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நியமன இழுபறி பெரும் சர்ச்சையாக காணப்பட்டமையால் யாழ்ப்பாணம் தொடர்பில் வேறு எந்த விடயமும் கவனம் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (கு-105)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு நிதி விடுவிப்பில் இழுபறிநிலை

## 2 வாரங்களில் சீராகும் என்கிறார் முகாமையாளர்

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சியில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்திவரும் வீட்டுத்திட்டங்களுக்கான நிதி விடுப்பில் இழுபறி ஏற்பட்டுள்ளது என்று தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதனால் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ரி. சுபாஸ்க ரனிடம் கேட்ட போது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தங்களால் ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் ஆயிரத்து 371 வீடுகள் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. இவர்களுக்கான நிதியைப் படிப்படியாக விடுவிப்பதில் தற்காலிக தாமதம் ஒன்று ஏற்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்திலிருந்து போதுமான நிதி கிடைக்கப்பெறவில்லை. இதனாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டது. இருப்பினும் இரண்டு வாரங்களுக்குள் இந்த நிலமை சீர் செய்யப்பட்டு கட்டம் கட்டமாக வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான நிதி விடுவிப்பு இடம்பெறும். இந்த நிலமை எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகிறது. ஆனாலும் இது வொரு தற்காலிக தாமதமே.

வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் எவ்வித அச்சமும் இன்றி வீடுகளை அமைக்கும் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கலாம்- என்றார். (கு-214)

# பிரதேச செயலகம் காணி பிடிக்கிறது

## மீட்குமாறு உறுப்பினர் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஜூன் 18

வலி.தென்மேற்குப் பிரதேசத்துக்குச் சொந்தமான 40 ஏக்கர் நெற்காணி வலி. மேற்குப் பிரதேச செயலகத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லைக் கல் நடப்பட்டுள்ளது என்று தெரிவித்த வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ரி.தர்ம குலசிங்கம், பிரதேச செயலகத்திடமிருந்து மேற்படி காணியை மீட்பதற்கு துரிதமாக நடவடிக்கையெடுக்குமாறு தவிசாளரைக் கோரியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுக்கிடையில் எல்லை அமைப்பு வேலைகள்மீள்பரிசீலனை செய்யப்பட்டு எல்லைக் கற்கள் நடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான ஜே/149 கிராம அலுவலர்கள் பிரிவில் 5ஆம் வட்டாரத்திலுள்ள 40 ஏக்கர் விரிவாக்கமுள்ள நெற்காணியை வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம் கையகப்படுத்தியதுடன் அதற்கான எல்லைக் கல்லையும் நட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த விவசாய சம்மேளனத் தலைவர், பிரதேச சபை உறுப்பினரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து எவருக்கும் அறிவிக்காமல் காணி அளவீடு செய்து எல்லைக் கல் நடப்பட்டமை பற்றி தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்த உறுப்பினர் தமது பகுதிக்குச் சொந்தமான காணியை வலிகாமம் மேற்குப்பிரதேசத்திலிருந்து மீட்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். (கு-115)

# மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

செங்கலடி, ஜூன் 18

சமுர்த்தி பயனாளிகள் தெரிவின்போது புறக்கணிப்பு நடந்துள்ளதாகத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலடி பிரதேச செயலகத்தின் சமுர்த்தித் திட்ட முகாமைத்துவப் பணிப்பாளர் அடுத்த ஒரு வார காலத்துக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (கு)

# பணி செய்ய மறுத்தார் என்று அதிகாரி மீது மன்றில் வழக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18

வயல் காணியில் விவசாயம் செய்ய விடாது தனிநபர் ஒருவர் அச்சுறுத்துகிறார் என்று முறையிடச் சென்ற போது, வாள்வெட்டுக் குழுவைக் கூறி பயமுறுத்தினார் என்று கூறி யாழ்ப்பாணம் கமலநசேவைகள் திணைக்கள நிர்வாக அலுவலர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கமநல சட்ட விதிமுறைகளை மீறி வயல் காணியில் கட்டடத்தை அமைத்த நபர் அருகில் அந்தக் கட்டடத்துக்கு அருகில் உள்ள வயல் காணிகளில் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அச்சுறுத்துவதுடன், விதைப்புக்களில் ஈடுபடமுடியாதவாறு அச்சுறுத்துகிறார் என்று பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கேட்பதற்குச் சென்ற குறித்த பாதிக்கப்பட்ட நபர், கமநல சேவைகள் திணைக்களத்தின் நிர்வாக அலுவலராகக் கடமையாற்றும் ஒருவருடன் உரையாடியுள்ளர். எனினும் நிர்வாக அலுவலர், அதற்கான தீர்வு தொடர்பாகப் பேசாது இங்கே வாள்வெட்டுக் குழுவினர் உள்ளனர் என்றும், தனக்கு இரண்டு பிள்ளைகளும், மனைவியும் இருகிறார்கள் உங்கள் பிரச்சினையைப் பார்க்க முடியாது என்றும் கூறித் தன்னை அச்சுறுத்தினார் என்றும், வயல்காணிகளை குறித்த நபருக்கே விற்றுவிடுங்கள் என்று ஆலோசனை வழங்கினார் என்றும் தெரிவித்து பாதிக்கப்பட்ட பெண் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டை அடுத்து யாழ்ப்பாண பொலிஸார் கமநலசேவைகள் திணைக்கள நிர்வாக அலுவலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நிர்வாக அலுவலர் அச்சுறுத்தியது தொடர்பாக கமநலசேவைகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் எழுத்து மூலம் முறைப்பாடு வழங்கியும் இதுவரை அந்த அலுவலருக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட பெண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுடைய குற்றச்சாட்டுத் தொடர்பாக யாழ்ப்பாணம் கமலநசேவைகள் திணைக்கள நிர்வாக அலுவலருடன் உதயன் தொடர்பு கொண்டான். இதன் பொது ஏற்கனவே அந்தப் பெணுக்கு இங்கு நடப்பதைத் தெரியப்படுத்தியபோது, அவர் தவறாக எண்ணி என்மீது குற்றஞ்சுமத்தியுள்ளார். நீதிமன்றம் தொடர்பில் இதுவரை எனக்கு அனுபவங்கள் இல்லை. இதுவே முதல் முறை, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க முடிமா என்று கூட எனக்குத் தெரியாது என்றார். இந்த வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (எ-21)

# பண்டாரவன்னியன் பூங்கா பராமரிப்பில்லை என விசனம்



மன்னார், ஜூன் 18

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பாராமரிப்பில் கற்சிலைமடுவில் உள்ள பண்டாரவன்னியன் பூங்கா பராமரிப்பின்றி காணப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

இது தொடர்பாக புதுக்குடி யிருப்பு பிரதேச சபை தவிசாளர் பிரேமகாந்த் அவர்களிடம் கேட்டபோது, கற்சிலைமடு பண்டாரவன்னியன் பூங்காவைப் பராமரிக்கும் பொறுப்பை கற்சிலைமடு பண்டார வன்னியன் சனசமூக நிலையத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவர்களிடம் பேசி கற்சிலைமடு பண்டார வன்னியன் பூங்காவை தொடர்ச்சியாகப் பராமரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவித்தார். (கு-213)

## வாகன விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி,ஜூன் 18

சாவகச்சேரியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந்தார். சாவகச்சேரி, நுணாவில் மத்தி ஏ -9 முதன்மை வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி வந்த தனியார் பேருந்து ஒழுங்கையொன்றில் திரும்புவதற்காக வேகத்தைக் குறைத்தபோது பின் தொடர்ந்து வந்த உந்துருளி மோதியது. இதன்போது உந்துருளியில் பயணித்த இளைஞன் காயமடைந் தார். சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த அர்த்த நாரீஸ்வரன் கோபிசன் (வயது-20) என்ற இளைஞனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

## பொதுமக்கள் தினம்

யாழ்ப்பாணம்,ஜூன் 18

ஆளுநரின் பொதுமக்கள் தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நாளை புதன்கிழமை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## பாடசாலைகளில்

# இராணுவ பாதுகாப்பை விலக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்

### ஆளுநர் ராகவனுக்குச் சிறீதரன் எம்.பி. கடிதம்

*யாழ்ப்பாணம், ஜூன் 18*

குண்டுவெடிப்பு நடந்த கொழும்பில் இராணுவத்தினரின் பாதுகாப்பு நீக்கப்பட்டு வழமைக்கு வந்துள்ளது. அவ்வாறிருக்க கிளிநொச்சி பாடசாலைகளில் ஏன் இராணுவத்தினரின் பாதுகாப்பு இன்னும் நீடிக்கிறது? எனவே பாடசாலைச் சூழலை இயல்புநிலைக்குக் கொண்டுவர இராணுவப் பாதுகாப்பை உடன் நீக்க நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கு, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதம் மூலமாகக் கோரியுள்ளார். கடிதத்தின் பிரதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதிய தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட மே 6ஆம் திகதி தொடக்கம் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்றபேரில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இராணுவத்தினரும், சிவில் பாதுகாப்புப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது அசாதாரண சூழ்நிலை மாறி இயல்புநிலை மீளத் திரும்பியுள்ள போதும் இன்றுவரை பாடசாலைகள் முழுநேர இராணுவப் பாதுகாப்பிலிருந்தும், கண்காணிப்பிலிருந்தும் விடுவிக்கப்படவில்லை.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவத் தலைவர்களை விடுத்து இராணுவத்தினரும், சிவில் பாதுகாப்புப் படையினருமே மாணவர்களையும், அவர்களின் புத்தகப் பைகளையும் சோதனைக்குட்படுத்துவதை இன்றையதினம்கூட (கடந்த வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் என்னால் நேரடியாக அவதானிக்க முடிந்தது.

அதேவேளை கடமை நிமித்தமோ, அவசிய தேவைப்பாடுகள் குறித்தோ வலயக்கல்வி அலுவலர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்கூட பாடசாலைகளுக்குள் நுழைய முடியாதநிலை காணப்படுகிறது.

மேற்படி பாடசாலைக்கு நான் நேரடியாகச் சென்றிருந்தபோது என்னாலும் இயல்பாக அந்தப் பாடசாலைக்குள் செல்லமுடியாத நிலையே இருந்தது. குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ள நிலையிலும், கொழும்பிலுள்ள பிரபல தேசியப் பாடசாலைகளில்கூட இராணுவப் பிரசன்னம் அற்றிருக்கும் சூழலிலும் தமிழர்கள் வாழும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளை இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்குள் வைத்திருப்பது மக்கள் மத்தியில் விசனத்தையும், அச்ச உணர்வையும் தோற்றுவிக்கும் செயற்பாடாகவே உள்ளது.

தாங்கள் அரசதலைவரின் பிரதிநிதி என்ற அடிப்படையில் எமது பகுதி பாடசாலைகளை இராணுவமயப்படுத்தலிலிருந்து விடுவிப்பதற்கும், பாடசாலைச் சூழலை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும், ஆசிரியர்கள், மாணவர்கள் மன அழுத்தங்களும், கெடுபிடிகளும் அற்ற இயல்பான சூழலில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (த)

## குடும்ப தலைவர் மீது வாள்வெட்டு

சாவகச்சேரி,ஜூன் 18

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பத் தலைவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

வீதியில் நடந்து சென்ற குடும்பத் தலைவர் மீதே இந்த வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கெருடாவில் வடக்கைச் சேர்ந்த பரலச்சந்திரன் செல்வகுமார் (வயது - 44) என்பவரே காயமடைந்தார்.

தலையின் பின்பகுதியில் வெட்டுக் காயம் ஏற்பட்ட நிலையில் உடனடியாகச் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

## வருடாந்த திருவிழா

கொடிகாமம், ஜூன் 18

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

29ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## யாழ்.தமிழ்ச்சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 18

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சிறிதுர்க்காமணி மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நடப்பாண்டில் அங்கத்துவ உரித்துடைய பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் கூட்டம் தொடர்பான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு பொதுச்செயலர் இ. சர்வேஸ்வராவுடன் தொடர்புகொள்ளுமாறும் தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## ஈருருளி பாதுகாப்பு நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 18

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவர்களின் நலன்கருதி ஈருருளி பாதுகாப்பு நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக மாணவர்களின் ஈருருளிகளை நிறுத்துவதற்குப் பாதுகாப்பு நிலையம் ஒன்று இல்லாமல் காணப்பட்டது.

இந்த நிலையில் பாடசாலை பழையமாணவர் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் கனடா நாட்டில் வசிக்கும் கந்தசாமி ரவீந்திரனால் 100அடி நீளம் கொண்ட ஈருருளி பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் சி.இந்திரகுமார் தலைமையில் மாணவர்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-70)



# பொலிஸார் கோரும் விவரப் படிவத்துடன் வாக்காளர் படிவத்துக்குத் தொடர்பில்லை

### தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

வாக்காளர் பட்டியலை விநியோகம் செய்யும் கிராம அலுவலர்கள் அதனோடு இணைத்து பொலிஸாரால் தகவல் திரட்டும் விண்ணப்பத்தை வழங்க முடியாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் இரட்ண ஜீவன் எச் ஹூல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஜூன் மாதம் வாக்காளர் பதிவு மாதம் என்பதனால் அதன் பிரகாரம் வாக்காளர் விவரப் படிவங்கள் கிராம அலுவலகர் மூலம் இல்லங்கள் தோறும் வழங்கப்பட்டு விவரங்கள் பெறப்படுகின்றன.

அவ்வாறு வழங்கப்படும் படிவங்களுடன் இணைத்து பொலிஸார் தகவல் பெறும் ஒரு சிறிய படிவத்தையும் இணைத்து கிராம அலுவலர்கள் விநியோகம் செய்வதாக பலரும் முறையிடுகின்றனர்.

உண்மையில் வாக்காளர் படிவம் மட்டுமே தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட படிவம். பொலிஸார் தகவல் திரட்டும் படிவத்துக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது. அதற்கு கிராம அலுவலகர்களும் பொலிஸாருமே பொறுப்புக் கூற வேண்டும். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எந்தக் காலத்திலும் பொறுப்புக் கூற மாட்டாது. இவ்வாறு இரு படிவமும் இணைத்து வழங்கப்படுவதாக முன்பும் முறையிடப்பட்டுள்ள சமயம் அத்தனை கிராம அலுவலகர்கள் மறைத்திருந்தனர்.

தற்போது மீண்டும் அதே முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் ஆணைக்குழுவில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். என்றார்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

வாக்காளர் பட்டியலே தேர்தல்கள் சட்டப்படி விநியோகம் செய்யும் படிவம் . அதேநேரம் பொலிஸாரின் படிவம் அது பொலிஸார் கிராம அலுவலகர் ஊடாக விவரம் கோரும் படிவம். இரண்டிற்கும் எந்த தொடர்பும் கிடையாது. அதேநேரம் இரு படிவங்களையும் ஒன்றாக இணைத்து அனைத்தும் ஒரே காரணத்துக்கானது என கிராம அலுவலர்கள் கோரவும் முடியாது.

இரண்டையும் தனியாக மேற்கொள்ளுமாறு சகல கிராம அலுவலர்களுக்கும் உடனடியாக அறிவுறுத்தப்படும் எனத் தெரிவித்தார். (ஐ-105)

## போயா தினத்தில் இருவர் கைது

சாவகச்சேரி, ஜூன் 18

போயா தினத்தன்று அரச சாராயம் விற்பனை செய்த மற்றும் கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஆகிய குற்றச்சாட்டில் இருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் நேற்றுமுன்தினம் நடத்திய திடீர் சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிரான வழக்குகள் நாளை புதன்கிழமை நீதிமன்றில் தாக்கல் செய்யப்படுமெனவும் நிலையத்தினர் தெரிவித்தனர். (ஐ-9)

# ஈழத்து இந்து ஆலயங்களின் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன் 18
'இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஈழத்து இந்துக் கோயில்கள் - தொல்பொருள்களும் இலக்கிய மரபுகளும்' எனுந் தொனிப்பொருளில் ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளது.
தேசிய ஒருமைப்பாடு, அரசகருமமொழிகள், சமூகமேம்பாடுமற்றும்இந்துசமய, விவகார அமைச்சின் வழிகாட்டலில் இயங்கும் இந்து சமயகலாசாரஅலுவல்கள்திணைக்களத்தால் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
சமய சின்னங்கள், இந்துக் கோயில்கள், தொல்பொருள்கள், இலக்கிய மரபுகள் ஆகியவற்றின் புகழை உலகறியச் செய்யவும், அவற்றின் தொன்மையை பாதுகாக்கும் நோக்கிலும் இந்த ஆய்வு மாநாடு நடத்தப்படவுள்ளது. இந்த மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
தொல்பொருள் சின்னங்கள், சாசனங்கள், தமிழ், சிங்கள, சமஸ்கிருத, பாளி இலக்கிய மரபுகள் மற்றும் வெளிநாட்டவர்கள் எழுதி வைத்த குறிப்புக்கள் போன்றவற்றை ஆய்வு மூலாதாரங்களாகக் கொண்டு ஆய்வுக் கட்டுரை சமர்பிக்க முடியும்.
கட்டுரை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாகத் 'பணிப்பாளர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248, 1/14, காலிவீதி, கொழும்பு 04' என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது hindudir@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்கலாம்.
கட்டுரை சமர்ப்பிக்கும் ஆய்வாளர்கள் தமிழில் பன்னிரண்டு புள்ளியளவில் ஏ4 அளவு தாளில் எட்டுப் பக்கங்களுக்கு மேற்படாமல் மேற்கோள், குறிப்புப்பட்டியல், உசாத்துணை நூற்பட்டியல், கட்டுரைச் சுருக்கம், கட்டுரையாளர் விவரம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றுடன் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 18
யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணைகாட்டுத்துறை அருள்மிகு சிறி அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து10நாள்கள்திருவிழாநடைபெறும். எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 29 ஆம் திகதி சனிக்கிழமை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் நடைபெறவுள்ளன.
கொடியேற்றத் திருவிழா, தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தத்திருவிழா நாள்களில் அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



# மாதா சொரூபம் விசமிகளால் உடைப்பு



யாழ்ப்பாணம்,ஜூன் 18
யாழ்ப்பாணம் மணியம்தோட்டம்பகுதியில் இருந்த மாதா சொரூபம் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.
மீன்பிடித்தொழிலுக்காக அந்தபகுதிக்குவந்த சிலர் சொரூபம் உடைக்கப்பட்டிருப்பதை கண்டு பொலிஸாருக்கும், பிரதேச வாசிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.
அரியாலை மணியம்தோட்டம் கடற்கரையில் அப்பகுதி மக்களால் வேளாங்கன்னி மாதா சொரூபம் வைக்கப்பட்டு வழிபடப்பட்டுவருகிறது.
நேற்றைய தினம் நள்ளிரவு வரை அந்த சொரூபம் அழகான தோற்றத்துடன் காட்சியளித்ததாகவும், நாட்டின் தற்போதைய சூழ்நிலையைவைத்து, மதங்களுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயும்பிரச்சினைகளை தோற்றுவிக்கும் நோக்கத்துடன், இந்த சிலை உடைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.
தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சிலை உடைப்புச் சம்பவங்களை கண்டிப்பதுடன், சிலை உடைத்தவர்களை இனங்கண்டு உரிய தண்டனை வழங்க வேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இந்த சிலை உடைப்பு சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
இதே போன்று கடந்தவருடமும் யாழ்ப்பாணம்மண்டைதீவுசந்தியில் அமைந்துள்ள புனித பேதுருவானவரின் சிலை விசமிகளால் உடைக்கப்பட்டது.
(ஐ7.106)

## உடுவில்வாசி கைது

யாழ்ப்பாணம்,ஜூன் 18
தொடருந்து நிலைய அதிகாரிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன்தொடர்புடையகுற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம்கொக்குவில்பகுதியில் அண்மையில் இருகுழுக்களுக்கிடையில்ஏற்பட்டமோதலில் ஒருவர் தலையில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அவ்வாறு காயமடைந்தவர் கொக்குவில் தொடருந்து நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரி என்று கூறப்படுகின்றது.
இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் உடுவிலைச் சேர்ந்த 22 வயதுடைய நபரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
மேலும்தாக்குதலுக்குபயன்படுத்தியதாக கூறப்படும் உந்துருளி ஒன்றினையும் மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ரி1)

## இரு குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்



வவுனியா,ஜூன் 18
போரால் பாதிக்கப்பட்ட மல்லாவி பிரதேசத்தைச் சேர்ந்த 2 குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.
இரணைப்பாலையைச் சேர்ந்த செல்வம் வேலுப்பிள்ளையின் அனுசரனையில் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவரால் இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-222)



## தந்தையர் தினத்தில் முதியோர் மதிப்பளிப்பு

வவுனியா,ஜூன் 18
பன்னாட்டு தந்தையர் தினமான நேற்றுமுன்தினம் முதியவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.
வவுனியா சாயி முதியோர் மகிழ்வகத்திலுள்ள முதியவர்கள் வவுனியா சமூக அமைப்புக்களால் மதிப்பளிக்கப்பட்டனர்.
அத்துடன் ராம் பவுண்டேசனின் நிதி உதவியில் சாயி மகிழ்வகத்திலுள் முதியோர்களுக்குப் புத்தாடை, உணவுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ஐ)

## திடீரென முளைத்த மாதா சிலையால் பரபரப்பு!

மன்னார்,ஜூன் 18
மன்னார் அருவியாற்று பாலத்துக்கு அருகில் திடீர் எனக் காணப்பட்ட மாதா சிலையால் பரபரப்பு ஏற்பட்டது.
முசலிப்பிரதேசத்தின் முத்தரிப்புத்துறையையும் நானாட்டான் பிரதேசத்தையும் இணைக்கும் அருவியாற்றுப்பாலத்தின் அருகாமையில் இந்த சிலையானது நேற்றுக் காலை முதல் காணப்பட்டது.



எட்டு அடிக்கும் அதிகமான நீளத்தில் கொங்ரீட் தூண் அமைத்து அதன் மீது மாதா சிலை வைக்கப்பட்டுள்ளது.
இரவோடு இரவாக குறித்த பகுதியில் மாதா சிலை கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)



## பாடசாலைக்கு மறைகாணிகள் பொருத்தப்பட்டன

ஏழாலை,ஜூன் 18
யாழ்ப்பாணம் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயத்தின் பாதுகாப்புக் கருதி 10 மறைகாணிகள் (சிசிரிவி) பொருத்தப்பட்டுள்ளன.
வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் "மயிலங்காடு இளைஞர் நற்பணி" மன்றத்தால் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாபெறுமதியான மறைகாணிகள் பொருத்தப்பட்டன. உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பாடசாலைகளின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டன. இந்த நிலையில் பல பாடசாலைகளில் பாடசாலை சமூகங் களினால் மறைகாணிகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (ஐ-39)

# சரவணபவன் எம்.பி. போன்று அரச வீடுகளை ஏனைய 18 கிராமங்களுக்கும் பெற்றுதாருங்கள்

## அமைச்சர் விஜயகலா, சுமந்திரன் எம்.பியிடம் மக்கள் வலியுறுத்து

சாவகச்சேரி, ஜூன் 17

மக்களின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அரச நிதியில் வீடுகளைப் பெற்றுக்கொடுத்தது போன்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்வார்களாயின் மக்கள் அதனால் பெருமளவில் பயன் பெறுவர்.

இவ்வாறு பொதுமக்கள் சார்பில் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் கூட்டம் நடந்தது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கைதடி கிழக்கு ராஜகிரி மற்றும் நாவற்குழி கோயிலாக்கண்டி ஆகிய இரு கிராமங்களிலும் அரச வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் நடுகை செய்யப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுவுக்கு இந்த வீட்டுத் திட்டம் குறித்து அறிவிக்கப்படாமை இணைத் தலைமையை அவமதிக்கும் செயல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதி என்னும் வகையில் தென்மராட்சிக் கிராம மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதன்படி நடவடிக்கை எடுத்திருந்தேன். இரு கிராமங்களுக்கு மாதிரி வீடமைப்புத் திட்டங்களைப் பெற்றுக் கொடுத்தேன். அவற்றுக்கே அண்மையில் அடிக்கல் நடுகை செய்யப்பட்டன. என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விளக்கமளித்தார்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 கிராமங்கள் மாதிரி வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே. நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பொதுமக்களின் கருத்துக்களை ஏற்று வீடமைப்புத் திட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார். அது வரவேற்கத்தக்கது. திட்ட ஆரம்ப நிகழ்வுக்கு மக்கள் பிரதிநிதியை அழைப்பது மக்களின் விருப்பம். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இவ்வாறு செயற்பட்டால் பெருமளவு மக்கள் பயன்பெற முடியும். தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் இணைத் தலைவர் எம்.ஏ.சுமந்திரனும் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏனைய 18 கிராமங்களுக்கும் வீடமைப்புத் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்" என்று பொது அமைப்புகளின் பிரதிநிதிகளாகக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"மாவட்டத்தில் 20 மாதிரிக் கிராமங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வந்திருந்தன. கைதடி கிழக்கு மற்றும் நாவற்குழி கோவிலாக்கண்டி மக்கள் தன்னிடம் கோருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் எம்மிடம் வீட்டுத் திட்டத்தைக் கேட்டிருந்தார். காணி இருந்தால் வீட்டுத் திட்டம் தரமுடியும் என்று கூறியிருந்தோம். இரண்டு கிராமங்களைத் தேர்ந்தெடுத்துத் தந்திருந்தார். அந்த இடங்களை நாம் சென்று பார்வையிட்டிருந்தோம். அதன் பின்னரே குறித்த இரண்டு கிராமங்களுக்கும் வீடுகள் வழங்கச் சம்மதித்தோம். அதற்கான அடிக்கல் நடுகையும் இடம் பெற்றது" என்று தெரிவித்தார் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலக தொழில்நுட்ப அலுவலர். இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு அரச காணியும் அதில் வீடமைக்க 7 லட்சம் ரூபாவும் வழங்கப்படும். (உ-த 9,159,131)

# வடக்கு வரவுள்ளார் பெருந்தோட்ட அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தென்னை பயிர்ச்செய்கையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு பெருந்தோட்டத் துறை அமைச்சர் நவின் திஸநாயக்க வடக்கு மாகாணத்துக்குவருகை தரவுள்ளார் என்று தெரியவருகிறது.

மூன்று நாள் பயணமாக நவின் திஸநாயக்க வடக்கு மாகாணத்துக்கு வரவுள்ளார். அவரின் வருகையை அடுத்து பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு உயர்தர தென்னம் கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. மூன்று வருடத்தில் அதிக எண்ணிக்கையில் காய்க்கக்கூடிய இந்தத் தென்னம் கன்றுகள் முதல் தடவையாக 750 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன. அத்துடன் கிளிநொச்சி யில் தென்னை பயிர்செய்கை சபையின் பிராந்தியக் காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்விலும் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார். (ம-7)





# யாழில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம்,ஜூன் 18

போதை மற்றும் புகைத்தல் ஒழிப்பு தின விழிப்புணர்வுப் பேரணி யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலகத்தில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பிக்கப் பட்ட பேரணியானது, முதன்மை வீதி, பரி. யோவான் கல்லூரி வீதி வழியாக சுண்டுக்குழி சந்தியை அடைந்து கண்டி வீதியைச் சென்றடைந்து, அங்கிருந்து, பழைய பூங்கா வீதியில் உள்ள பிரதேச செயலகத்தில் நிறைவடைந்தது.

இந்த பேரணியின் போது, போதை மற்றும் புகைத்தலை தடுக்கும் வகையிலான வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு, பிரதேச செயலக அலுவலர்கள் மற்றும் பாதிரியார்கள், பொது மக்கள் எனப் பலரும், பேரணியாகச் சென்று, புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தினர். (ஐ-106)

# நாட்டில் பல இடங்களிலும் மழை பெய்யும் சாத்தியம்!

கொழும்பு, ஜூன்18

நாட்டின் பல இடங்களில் அடுத்த சில நாள்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளனஎன்றுவளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி, மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும்காலிமற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன்கூடியமழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டைமற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும்சிலஇடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன்கூடியமழைபெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும்.

மின்னல்தாக்கங்களினால் ஏற்படக்கூடியபாதிப்புகளை குறைத்துக் கொள் ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப் படுகின்றார்கள்.

அதேவேளை புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டைவரையானகரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடியமழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 40 கிலோ மீற்றர் வரை காணப்படும். திருகோணமலையிலிருந்து காங்கேசந்துறை ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையிலிருந்துபொத்துவில்வரையான கடற்பரப்புகளிலும் காற்றின்வேகமானதுஅவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

கடலில்பயணம்செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ம)

# கற்றல்வள நிலையம் திறப்பு

கொடிகாமம், ஜூன் 18

கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலையில் கற்றல்வள நிலையம் நேற்று அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி வ.நடராசா கலந்து கொண்டு கற்றல்வள நிலையத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி அ.மனோரஞ்சிதன், செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் இராஜி மயில்வாகனம் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

# மன்னாரில் 946 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

946 கிலோ கிராம் பீடி இலைகள் மன்னார் தாரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட் டுள்ளதாக கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையின் போது கட்டடம் ஒன்றில் 30பொதிகளில்மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணையின் போது மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட னர்.

இந்த வருடம் மாத்திரம் சுமார் 14 ஆயிரம் கிலோ கிராம் பீடி இலைகள் வடக்கில் மீட்கப்பட்டுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



# வடமாகாணக் கல்விக்கு தனி அமைச்சு வேண்டும்

## ஏனையவற்றை பிற அமைச்சுக்களுடன் இணைக்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஜூன் 18*

*வடக்கு மாகாணத்தில் கல்வியைத் தனி அமைச்சாக மாற்றி, அதனுடன் இதுவரை இணைந்துள்ள பண்பாட்டலுவல்கள், விளையாட்டு, இளையோர் விவகார அலகுகளை ஏனைய அமைச்சுக்களுடன் இணைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.*

வடக்கு ஆளுநரிடம் சங்கம் கடிதம் மூலமாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அதன் பிரதி கொழும்பு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கும் அனுப்பிய நிலையில் அவர் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் என்றும் சங்கம் தெரிவித்தது.

சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தின் கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள், விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சிலிருந்து கல்வி அமைச்சை தனியாக்கி வடக்கு மாகாணத்தின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாணத்தின் ஆளுநர் சுரேன் ராகவனிடம் கோரிக்கை முன்வைத்திருந்தது.

கோரிக்கைக் கடிதத்தின் பிரதி கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு அனுப்பியிருந்தோம். இந்த நிலையில், அதற்கு ஆதரவு வழங்குவதாக விஜயகலா கடிதம் மூலமாக ஆளுநருக்கு அறிவித்து அதன் பிரதி தமக்கும் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண கல்வியில் ஏற்பட்ட பின்னடைவுகள், அதற்கான காரணங்களை விளக்கி அண்மையில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்கள் கலந்துரையாடல் நடத்தியிருந்தோம்.

வடக்கு மாகாணத்துக்குத் தனியான கல்வி அமைச்சு வேண்டும் என்ற கோரிக்கையை எழுத்துமூலமாக முன்வைத்திருந்தோம்.

பிரதிகளை கொழும்பு கல்வி அமைச்சர், கல்வி ராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பியிருந்தோம். இந்த நிலையில், ராஜாங்க அமைச்சர் விஜயகலா அதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இதனை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் விரைந்து செயற்படுத்தி வடக்கு மாகாணத்தின் கல்வியைப் புதிய பாதைக்கு இட்டுச்செல்வார் என்று நம்புகின்றோம் என்று செய்திக் குறிப்பில் உள்ளது.

மாகாணத்துக்கு ஐந்து அமைச்சுக்களே உள்ளன. அவ்வாறான நிலையில் கல்விக்குத் தனி அமைச்சு வேண்டும் என்பது மாகாணத்தில் 6 ஆவது அமைச்சை ஏற்படுத்துவதாகவுள்ளது. அதற்கு அரசமைப்பில் இடமில்லையே என்று தமிழர் ஆசிரியர்சங்கத்தின் பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரனிடம் கேட்டபோது, "கல்வி அமைச்சைத் தனி அமைச்சு ஆக்கி, கல்வி அமைச்சுடன் இணைந்துள்ள ஏனைய பிரிவுகளான பண்பாட்டலுவல்கள், விளையாட்டு, இளையோர் விவகாரங்களை வேறு அமைச்சுடன் இணைத்துவிடவேண்டும்.

கல்வி அமைச்சுக்கு என்று தனியே செயலர், பிரதிச் செயலர், கணக்காளர், நிர்வாக அலுவலர் இருத்தல் வேண்டும். கல்வி அமைச்சு தனியே இயங்க வேண்டும்" என்று தெரிவித்தார். (த)

# முன்னாள் புலி உறுப்பினர்கள் மூவர் மீது கொலை வழக்கு

## வவுனியா நீதிமன்றில் 24இல் விசாரணை

வவுனியா, ஜூன் 18

இலங்கையில் போர்க்காலத்தில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பாக கைது செய்து விளக்கமறியலில் உள்ள புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் மூவர் மீதான விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளன.

வழக்கு விசாரணைகள் இந்த மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி 18 கடற்படை அதிகாரிகள், 08 இராணுவத்தினர் என, விடுதலைப் புலிகளின் தடுப்பில் இருந்த 26 படையினர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர் என்றும், அவர்களின் சடலங்களை அடையாளம் காண முடியவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்த புலிகளின் புலனாய்வு முகாமை கைவிடும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கைதிகள் கொலை தொடர்பான விசாரணைகளை, 2010ஆம் ஆண்டு தீவிரவாத விசாரணைப் பிரிவு ஆரம்பித்திருந்தது.

நீண்ட விசாரணைகளின் பின்னர், மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான வழக்குகள் வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள், எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன என்று நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-21)

# திருடிய மாடுகளை வெட்டி மரை இறைச்சி என விற்பனை

## முள்ளியவளையில் மூவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 18

மாடுகளைத் திருடி, அனுமதியின்றி வெட்டி, அவற்றை மரை இறைச்சி என்றுகூறி விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டுக்களில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு முள்ளியவளை மாமூலைப்பகுதியில் அவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அங்குள்ள ஒருவர் தனது மாட்டுக் கன்றுகள் இரண்டு திருடப்பட்டுள்ளன என்று முள்ளியவளைப் பொலிஸில் முறையிட்டார். மரை இறைச்சி என்று சிலர் இறைச்சி விற்பனையில் ஈடுபட்டமை பற்றியும் கூறி அவர்கள் தொடர்பில் சந்தேகம் தெரிவித்துள்ளார். பொலிஸார் சந்தேகநபர்களை விசாரணைக்கு உட்படுத்தியபோதே பசுக் கன்றுகளை வெட்டி மரை இறைச்சி என்று கூறி விற்பனை செய்துள்ளோம் என்று கூறினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பசுக் கன்றுகளின் பெறுமதி 70 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்துப் பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்தனர். மாமூலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் முள்ளியவளையைச் சேர்ந்த இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் அவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-ரி3)

# மன்னார் பிரதேச அபிவிருத்திக்கு ரூ.7 கோடி ஒதுக்கீடு

மன்னார், ஜூன்18

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களின் அபிவிருத்திகளுக்கென்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் 7 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று பிரதேச சபையின் கடந்த 13ஆம் திகதிய அமர்வில் தவிசாளர் முஜாஹிர் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட 34கிராம அலுவலர் பிரிவில் 83 கிராமங்களை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படும் என்றும் தவிசாளர் தெரிவித் தார். (த-213)

# ரூ.15,000க்கு பொருள்கள் கொடுத்து கூட்டமைப்பை விமர்சிக்கிறார்கள்

## மாகாண முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு



வவுனியா, ஜூன் 18

பத்தாயிரம் ரூபா அல்லது பதினையாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொடுத்து விட்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைவிமர்சிக்கிறார்கள் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.

வவுனியா தோணிக்கல் ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கு கிராம எழுச்சித் திட்டத்தில் அமைக்கப்பட்ட அலுவலகம் மற்றும் கடினப்பந்து பயிற்சிக்கூடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும்தெரிவித்ததாவது:

முழு வளங்களும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் அதனூடாக அவர்கள் விரும்புகின்ற விதத்திலே தங்களுடைய எதிர்காலங்களை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் நாங்கள் இந்தத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

வவுனியா மாவட்டத்தில் சிலர் விளையாட்டுத் துறையை முன்னெடுத்து அதனூடாக அரசியல் செய்கின்றார்கள். அவர்களுக்கான உபகரணங்களைக் கொடுத்துவிட்டு அரசியல் பேசுபவர்களாகத்தான் இன்று வன்னி மாவட்டத்தில் இருக்கின்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் காணப்படுகின்றார்கள்.

பத்தாயிரம் ரூபா அல்லது பதினையாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொடுத்து விட்டுதமிழ் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அரசுடன் இருக்கின்றது. நான் மட்டுமே தான் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்றேன் என்று சொல்லுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த மாவட்டத்திலே இருக்கின்றார்கள்.

ஆனால் நாங்கள் விளையாட்டை விளையாட்டாகப் பார்க்கின்றோம். விளையாட்டுக் கழகங்களை எங்களுடைய அரசியலுக்காகப் பயன்படுத்தத் தயாராக இல்லை என்பதை நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நீங்கள் (விளையாட்டு கழகத்தினர்) உங்களுடைய திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு எங்களாலான உதவிகளை செய்வதற்கு தயாராக இருக்கின்றோம். அதற்கான வளங்களை அதற்கான தேவைப்பாடுகளை அதனை செய்து தருவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதுபோல பல்வேறு விளையாட்டு மைதானங்களை சீரமைப்புச் செய்து கொண்டிருக்கின்றோம். செய்திருக்கின்றோம்.

எங்களுடைய இளைஞர்கள் எத்தனையோ பேர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்[illegible] என்ற சந்தேகத்தில் இன்னும் சிறைகளிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள் - என்றார். (த)

புத்தகப் பை வீசியெறிந்த சம்பவம்:

# மாணவன் விரும்பும் பாடசாலையில் கற்க வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் சாள்ஸ் வித்தியாலயத்திலிருந்து சான்றிதழைப் பெற்ற மாணவன் விரும்பும் தேசிய பாடசாலைகள் தவிர்ந்து எந்தப் பாடசாலையிலும் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் வித்தியாலயத்தில் தரம் 6இல் கல்வி கற்கும் மாணவன் தொடர்ந்தும் சாதாரண புத்தகப் பையில் புத்தகத்தை எடுத்துச் செல்வதனால் சோதனை நடவடிக்கையில் பெரும் இடையூறைச் சந்திப்பதாக மாணவனின் புத்தகப்பையை வீசி எறிந்தனர் என்று கூறப்பட்டது. அதனால் பெற்றோருக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அதனால் பெற்றோர் மாணவனின் விடுகைப் பத்திரத்தைக் கோரியுள்ளனர்.

மாணவனின் விடுகைப் பத்திரத்தையும் பாடசாலை நிர்வாகம் வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவனின் விடயம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதற்கு மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் கேட்டபோதே வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பாடசாலை விடுகைப் பத்திரம் வழங்கிய செயற்பாடும் உண்மை எனக் கண்டறியப்பட்டது. இதனால் பெற்றோரைத் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளைத் தவிர்த்து எந்தப் பாடசாலையில் அனுமதி கோரினாலும் அனுமதிப்பது என்றும் பெற்றோரும் மாணவனும் விரும்பினால் அந்தப் பாடசாலையிலேயே தொடர்ந்தும் கல்வி கற்க முடியும் என்றும் எமது முடிவைத் தெரிவித்துள்ளோம் - என்றார். (த-105)

# பிக்குகளின் கைகளில் முஸ்லிம்கள் பிரச்சினையை ஒப்படைத்துள்ளனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஆதங்கம்

வவுனியா, ஜூன் 18

முஸ்லிம் அமைச்சர்கள் தமது பிரச்சினையைப் புத்த பிக்குகளின் கைகளில் ஒப்படைத்துள்ளார்கள். இது ஆபத்தானது என்று நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவர்களுடைய பதவி விலகலை வரவேற்கத்தக்க விடயமாகப் பார்க்கவில்லை. ஏற்கனவே அமைச்சர் றிசாட் பதியுதீன் மீதும், ஆளுநர் ஹிஸ்புல்லா மீதும் அழுத்தங்கள் நாடு பூராகவும் இருந்தன. அப்போது அவர்கள் இருவரும் அல்லது ஒட்டுமொத்தமாக முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியிருந்தால் அவர்கள் தங்களது நியாயப்பாட்டை வெளிப்படுத்தும் தன்மையோடு விலகியுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால் இப்போது அவர்கள் இரண்டு தவறை செய்துள்ளார்கள். ஒன்று புத்த பிக்குகளின் கைகளில் இந்தப் பிரச்சினையைக் கொடுத்துள்ளார்கள். சாதாரண சூழலில் விலகாது புத்த பிக்குகள் உண்ணாவிரதம் இருந்த பின்பு தங்களால் நாட்டில் பெரும் பிரச்சினை வரும் என்ற அச்சம் காரணமாகத் தான் அவர்கள் ஒட்டுமொத்தமாக பதவி விலகியுள்ளனர். நாட்டில் நன்மை நடைபெற வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று அவர்கள் செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

ஏற்கனவே புத்த மதத்துக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதை நாம் பெரும் குறைபாடாகச் சொல்லி வந்திருக்கின்றோம். தற்போது புத்த பிக்குகள் தங்களுடைய மதம் சார்ந்த செயற்பாடுகளை மறந்து எல்லா விடயத்திலும் தலையிட்டு அரசியல் ரீதியாக பெரும்பான்மை இனத்துக்கு வலுச் சேர்க்கின்ற வகையில் செயற்படுகிறார்கள். இந்த நாட்டில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம், மலையக மக்களுடைய பிரச்சினைகளில் அவர்களுடைய ஆதிக்கம் கூடுதலாக இருப்பதற்கான ஒரு சக்தியாக இது மாற்றப்பட்டுள்ளது.

ஆகவே முஸ்லிம் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் புத்த பிக்குகளின் கைளில் ஒப்படைத்து விட்டு பதவி விலகியுள்ளமை தேசிய இனமாகிய எங்களுக்குப் பெரும் பிரச்சினைகளை உண்டு பண்ணியுள்ளது. எமது தீர்வு விடயத்திலும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையைப் பிக்குகளின் போராட்டத்தின் பின்னரான ஒட்டுமொத்த பதவி விலகல் ஏற்படுத்தியுள்ளது. இதனால் இன்னும் பிரச்சினைகளும், குழப்பங்களும் வரவுள்ளன. முஸ்லிம் தலைவர்கள் ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர் என்று கூறப்படுகிறது. தமிழர் தரப்பில் ஒற்றுமை இல்லை என்று பேசப்படுகிறது. ஆனால் அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை - என்றார். (த)

# இந்த் வருடம் முதல் ரோபோ போட்டிகள்


யாழ்ப்பாணம், ஜூன் 18

பாடசாலை மாணவர்களுக்கிடையில் இந்த வருடம் முதல் ரோபோ ஆக்கப் போட்டிகள் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.

மாணவர்களின் ஆக்கத்திறனை ஊக்குவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் தொழில் நுட்ப உலகத்தில் மாணவர்கள் வெற்றிகரமாக வாழமுடியும் என்ற நோக்கில் ரோபோ ஆக்கத் திறன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

உற்பத்தி, கைத்தொழில், கல்வி, சுகாதாரம், களியாட்டம், பொறியில் துறை ஆகியவற்றில் பிரகாசிக்க ரோபோக்களை மாணவர்கள் உருவாக்க வேண்டும். பாடசாலை மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை இந்த போட்டிகள் நடைபெறும். பாடசாலை மட்ட போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 30ஆம் திகதிக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் மாகாண பணிப்பாளர்கள், கல்வி அமைச்சின் செயலர்கள் உட்பட அனைத்து கல்வி உயர்மட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)



பொசன் போயா தினத்தை முன்னிட்டு வவுனியா நகரில் அமைந்துள்ள சிறி போதிதக்சிணாராமய பௌத்த விகாரையில் விகாராதிபதி சியம்பலாகஸ்வெல விமல சாரநாயக்க தேரரின் தலைமையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. வழிபாடுகளில் பௌத்தர்கள் மற்றும் மூவின மக்களும் கலந்து கொண்டனர். வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேராவின் வழிகாட்டலில் 21 ஆவது மற்றும் 56 டிவிசன் இராணுவத்தினர் கலந்து கொண்டனர். மூன்று மாடுகளையும் காணிக்கையாக வழங்கினர். (த)

### ஈருருளி கையளிப்பு

கொடிகாமம், ஜூன் 18

தாய், தந்தையரை இழந்த பாரதிபுரம், கிளிநொச்சி மற்றும் அளம்பில் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.

உதவும் இதயங்கள் நிறுவனத்தின் ஊடாக கயில்புறன் ஜேர்மனியில் வசிக்கும் பரமேஸ்வரனின் மகளின் பூப்புனித நீராட்டு விழாவை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ-159)

### சோதனை தடையில் மோதி படுகாயம்

முல்லைத்தீவு, ஜூன் 18

முள்ளியவளைப் பகுதியில் படையினரின் வீதி சோதனைத் தடையில் உந்துருளி மோதியதில் அதில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளை வீதியில் தண்ணீரூற்று பகுதியில் உள்ள படையினர் மற்றும் பொலிஸாரின் வீதிச்சோதனைக்காக வைக்கப்பட்ட பரல்களில் உந்துருளி மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த இந்த விபத்தில் படுகாயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 38 வயதுடையவரே படுகாயமடைந்தார். (த-ரி3)



*சுகாதார விதிமுறைகளை மீறிய*

# குடிதண்ணீர் சுத்திகரிப்பு விற்பனையாளருக்கு தண்டம்

வலி.தென்மேற்கு, ஜூன் 18

சுகாதார விதிமுறைகளை மீறி இயங்கிய குடிதண்ணீர் சுத்திகரிப்பு விற்பனை நிலைய உரிமையாளருக்கு தண்டம் விதிக் கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை பகுதியில் மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் அ.சுரேஷ்குமார் சோதனை நடத்தினார். இதன்போது குறித்த பகுதியில் இயங்கிய குடிதண்ணீர் சுத்திகரிப்பு விற்பனை நிலையத்தில் சுகாதார சீர்கேடுகள் இருந்தமையை அவதானித்துள்ளார்.

இதையடுத்து மேற்படி நிலை உரிமையாளருக்கு எதிராக இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு யாழ்ப்பாண நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சுத்திகரிப்பு நிலைய முகாமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார்.

இதனையடுத்து யாழ்ப்பாண நீதிமன்ற மேலதிக நீதிவான் இவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தமையுடன் மருத்துவச் சான்றிதழ் கிடைக்கும்வரை மருத்துவ நிலையத்தைத் தற்காலிகமாக மூடுமாறும் உத்தரவிட்டுள்ளார். (ஜ-115)

# அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கோரி சாகும்வரை உணவு ஒறுப்பு

## இந்துக் குரு, பிக்குகள் உறுப்பினர்கள் ஆரம்பித்தனர்

எருவில், ஜூன் 18

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கோரி சாகும்வரையான உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 9 மணிக்கு இது ஆரம்பிக்கப்பட்டது.

கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்த சிவம் குருக்கள், சந்திரசேகரம் ராஜன், கல்முனை மாநகரசபை உறுப்பினர் அளக்கோன் விஜயரெட்னம், கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஆகியோர் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் சமூக அமைப்புக்கள், கல்முனை வாழ் தமிழ் இளைஞர்களும் இணைந்து போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 29 கிராம அலுவலர் பிரிவுகளையும் 38 ஆயிரம் பேரையும் உள்ளடக்கிய நிலத்தொடர்புள்ள தமிழர்கள் பூர்வீகமாக செறிந்து வாழும் பகுதி. இந்தப் பிரதேச செயலகம் 1989ஆம் ஆண்டு உதவி அரச அதிபர் அலுவலமாக ஆரம்பிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு பிரதேச செயலகமாக அரசிதழில் அறிவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 31 கிராம அலுவலர் பிரிவுகளுடன் செயற்பட்டுவந்து தற்போது இந்தப் பிரதேச செயலகத்தில் 2 பிரிவுகள் பிரிக்கப்பட்டு அப்பிரிவுகள் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டன. ஆனாலும் 29 பிரிவுகளுடன் இன்றுவரை செயற்பட்டு வரும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இன்றுவரை தரமுயர்த்தப்படவில்லை. (கு)

சோளனில் படைப்புழுவின் தாக்கம் அருகிவர

## நெற் செய்கையில் கதிர் வெட்டுப் புழு பெரும் நாசம் விளைவிக்க வாய்ப்பு

*நெல் ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் விவசாயிகளுக்கு எச்சரிக்கை*

தலைமன்னார், ஜூன் 18



கடந்த வருடம் சோளப் பயிர்களைப் படைப் புழுக்கள் தாக்கி விவசாயிகள் அதிலிருந்து மீண்டுவரும் நிலையில், தற்போது மன்னார் மாவட்டத்தில் சிறுபோக நெற் நெற்பயிரில் கதிர் வெட்டுப் புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவை பற்றி விவசாயிகள் அவதானமாக இருக்க வேண்டும் என்று முருங்கன் நெல் ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் சிறி இராஜேஸ் கண்ணா தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்டத்தில் முதன்மைக் குளமான கட்டுக்கரைக்குளத் திட்டத்தின் கீழ் சின்ன உடைப்பு, பெரிய உடைப்பு, அடைக்கலமோட்டை ஆகிய முதன்மை வாய்க்கால் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 700 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற் செய்கையில் விவசாயிகள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

தற்பொழுது பேரிடியாக, நெற்பயிரில் கதிர் வெட்டுப் புழுவின் தாக்கம் மிகத் தீவிரமாக ஏற்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கதிர் வெட்டுப் புழுவின் தாக்கம் தற்பொழுது குருநாகல் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளதால் மன்னார் மாவட்ட சிறுபோக நெற் செய்கை விவசாயிகள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கடந்த வருடம் சோளப் பயிரில் ஏற்பட்ட படைப் புழுக்களின் தாக்கத்திலிருந்து விவசாயிகள் மீண்டெழுந்து வருகின்ற நிலையில் விவசாயிகள் தற்போது மிகவும் மும்முரமாக சிறுபோக நெற்பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

'மித்திம்னா செப்பரேட்டா' என்ற விஞ்ஞானப் பெயரைக் கொண்ட இந்தக் கதிர் வெட்டுப் புழு இரவு நடத்தையைக் கொண்டது. நெற்பயிரின் நாற்றுப்பருவத்தில் கடும் சேதத்தை ஏற்படுத்துகின்றது. கதிர் வெட்டுப் புழுக்கள் கூட்டமாக ஒரு நெல்வயலில் இருந்து மற்றுமோர் வயலுக்கு இடம்பெயருகின்றன. இந்தப் புழுக்கள் நெற்பயிரில் நாற்றுக்களின் முழு இலையையும் உண்பதுடன் நெற் கதிர்களையும் உட்கொள்வதன் விளைவாக பயிர்களின் வளர்ச்சி நிறுத்தப்பட்டுவிடும்.

இந்த நோய்த் தாக்கத்தின் அறிகுறியாக பயிர் வளர்ச்சிப் பருவத்தில் இலைகளின் நரம்புப் பகுதி உட்பட இலையின் பெரும்பகுதி அகற்றப்பட்ட நிலையில் காணப்படும். இவை விருத்தியடையும் நெல் மணிகளின் உள் உமி, வெளி உமி மற்றும் பூக்களில் உள்ள கேசரங்களையும் உண்ணும்.

நாற்று மேடைகளில் பெரிய கோண வடிவ பிளவு போன்ற தோற்றத்தில் நாற்றுக்கள் வெட்டப்பட்டு ஒழுங்கற்ற தோற்றம் ஏற்படும். சேதமானது பெரும்பாலும் வயலின் ஒருகுறித்த பகுதி வழியே ஏற்பட்டிருக்கும். சேதம் தீவிரமாக உள்ள நிலையில் ஒரே நேரத்தில் பல வயல்கள் பாதிப்படையும்.

நெல்மணிகள் நிரம்பும் பருவத்தில் முதிர்ந்த குடம்பிகள் நெற் கதிரின் அடிப்பகுதியை வெட்டுவதனால் அவை மடிந்து காணப்படும். சில முற்றாக நிலத்தில் வெட்டி வீழ்த்தப்படும். இது இந்தப் புழுவின் தனித்துவமான ஒரு இயல்பு. ஆகவே சிபார்சு செய்யப்பட்ட இரசாயனங்களைப் பயன்படுத்தி இவற்றை அழிக்க முடியும் - என்றார்.

(த-60)

# யாழ். மாவட்டதுக்கு ஒதுக்கிய நிதி திரும்பிச் செல்லவில்லை

*மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவிப்பு*

*யாழ்ப்பாணம், யூன் 18*

**யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்த மட்டில் திட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்டு கிடைத்த நிதியை எந்த காரணம் கொண்டும் எம்மால் திருப்பி அனுப்பியது கிடையாது என்பதனை உறுதியாக தெரிவிக்க முடியும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.**

அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்காக திட்டத்தினை நிறைவேற்றாது நிதியை மீண்டும் கொழும்பிற்கே திரும்பிச் செல்லும் வகையில் மத்திய அரசின் நிர்வாகமே செயல்பட்டதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்துக்கு கொழும்பு அரசால் கடந்த காலத்தில் கிடைத்த நிதியில் இருந்து திரும்புச் சென்ற நிதி தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்த மட்டில் எனது காலத்தில் திட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்டு கிடைத்த நிதியை முழுமையாகப் பயன் படுத்தியுள்ளோம் . சில திட்டங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் நிறைவேற்றிய பின்னர் நிதி கிடைத்த சந்தர்ப்பங்களும் உண்டு . மாறாக எக் காரணம் கொண்டும் கிடைத்த நிதி எம்மால் திருப்பி அனுப்பியது கிடையாது .

இதேநேரம் 2017, 2018ஆம் ஆண்டுகளில் டிசம்பர் மாதங்களில் கிடைத்த நிதியைக்கூட உடனடியாக பயன்படுத்தி அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம்.

இதேநேரம் 2018ஆம் ஆண்டில் கொழும்பு அமைச்சால் பல திட்டங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் அதிகமானவை மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்களுக்கு உட்பட்ட திணைக்களங்கள் என்பதனால் அந்த நிதி மாகாண சபையிடம் நேரடியாக கையளிக்கப்படாமல் அதற்கான செலவு மதிப்பீடுகள் தம்மால் தயாரித்து வழங்க முடியாது. எனவும் அது மத்திக்கும் மாகாணத்துக்குமான அதிகாரப் பகிர்வில் உள்ள பிரச்சினை என சர்ச்சை எழும்பியது.

இதன் காரணமாக ஒரு தொகை நிதி கிடைக்காமலேயே போன சந்தர்ப்பம் நிகழ்ந்தது - என்றார்.

(ஜ-105)

## வறட்சியான காலநிலை நீடித்தால் குளங்களின் மீன்கள் சாவு அதிகரிக்கும்

*நீர் உயிரினச் செய்கை விரிவாக்கல் பிரிவு தெரிவிப்பு*

வவுனியா, ஜூன் 18

வவுனியா மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெயிலுடனான காலநிலைநீடிக்குமாயின் வறட்சி ஏற்பட்டு பல குளங்களிலுள்ள மீன்கள் உயிரிழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்றுவவுனியாமாவட்ட தேசிய நீர் உயிரினச் செய்கை விரிவாக்கல் அலுவலர் யோ. நிசாந்தன் தெரிவித்தார்.

வவுனியா மூனாமடு குளத்தில் மீன்கள் உயிரிழந்து வருகின்றன. அவற்றை நேற்றுச் சென்று பார்த்தபின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து காற்று வெயிலுடனான கால நிலை நீடித்துச் செல்லுமானால் மேலும் பல குளங்களிலுள்ள தண்ணீர் வற்றிச் செல்லும்போது அங்குள்ள மீன்கள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது சிறுகுளங்களிலுள்ள தண்ணீர் அற்றுப்போகும் போது அங்குள்ள சிறு மீன்கள் உயிரிழக்கும் நிலை காணப்படுகின்றது. 350கிராம் நிறையுள்ள மீன்களை வலை மூலமாகப் பிடித்துக்கொள்ள முடியும். ஏனைய சிறு மீன்கள் வலையில் அகப்படுவதில்லை. அதனை அந்தப் பகுதியிலுள்ள மீனவர்கள் பிடித்துச் செல்வதுண்டு.

வவுனியா மாவட்டத்தில் 873 சிறுகுளங்கள் இந்த நிலயை எதிர்கொண்டுள்ளன. பெரிய குளங்களாகக் காணப்படும் பாவற்குளம், மாமடு குளங்களிலும் தற்போதுள்ள கால நிலை காரணமாக தண்ணீர் மட்டம் குறைந்து செல்கின்றது. இந்தக் குளங்களும் இந்தநிலையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மீன்களின் உயிரிழப்புக்கு இராசாயனம் எதுவும் பன்படுத்தப்பட்டிருக்கவில்லை. குளத்திலுள்ள தண்ணீர் வற்றிச் செல்வதால் வறட்சி காரணமாகவே மீன்கள் உயிரிழந்து வருகின்றன - என்றார்.

(த)

### விபத்தில் காயப்பட்டவர் இறந்தார்

முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு வற்றாப்பளையில் நடந்த விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு வற்றாப்பளை கேப்பாபிலவு வீதியில் கடந்த 8ஆம் திகதி உழவு இயந்திரம் தடம் புரண்டதில் விபத்து இடம்பெற்றது. முள்ளியவளை மாமூலையைச் சேர்ந்த க.ஜெயராசசிங்கம் (வயது - 55), முள்ளியவளை வற்றாப்பளையைச் சேர்ந்த பி.அகிலன் (வயது - 25) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது க.ஜெயராசாசிங்கம் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-ரி3)

## சிறுபோக இறைப்பு, வறட்சியால்தான் வ்வுனியா மூனாமடுக்குள மீன்கள் சாவு

*அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது*

வவுனியா, ஜூன் 18

வவுனியாவில் ஏற்பட்டுள்ள வறட்சி மற்றும் சிறுபோகத்துக்கு அதிக தண்ணீரை இறைத்ததால்தான் மூனாமடுக் குளத்துத் தண்ணீர் வற்றி மீன்கள் இறந்தன. அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுகாதார பணிமனையில் மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதர் எஸ். தியாகலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, புதுக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மூனாமடுக் குளத்தின் கீழ் விதைக்கப்பட்டுள்ள 45 ஏக்கர் சிறுபோக விவசாய நிலங்களுக்கு அதிகளவிலான தண்ணீரைப் பயன்படுத்தியமையால் குளத்துத் தண்ணீர் வற்றியுள்ளது.

அதனால்தான் அதிகளவான மீன்கள் இறந்துள்ளன. சில நாள்களுக்கு முன்னர் அவை இறந்துள்ளன என்பதால் அவை துர்நாற்றம் வீசுகின்றன.


இது குறித்து எமக்குத் தெரியப்படுத்தப்பட்டது. குறித்த நீர்ப்பாசனக் குளத்தின் பங்காளர்களின் துணையுடன் இறந்த மீன்களை அகற்றி புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த குளத்தின் தண்ணீர் மட்டத்தைக் கவனத்தில் கொள்ளாது சிறுபோக நெற் செய்கைக்குத் தண்ணீர் இறைக்கப்பட்டமையே மீன் இறப்புக்குக் காரணம். சம்மந்தப்பட்டவர்களின் பொறுப்பற்ற செயற்பாடே இத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

(த)

## பாடசாலைமாணவிக்கு ஈருருளி அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 18



முல்லைத்தீவு தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் கமலேஸ்வரன் பிரியங்கா எனும் என்ற மாணவிக்கு ஈருருளி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் சுதாகரன் தம்பதிகளின் புதல்வன் ஆதிரன் பிறந்த 31ஆம் நாளையொட்டி பாடசாலையின் பழைய மாணவர் கந்தப்பிள்ளை திலீபன் அவர்களின் ஒழுங்கமைப்பில் சிவம் அறக்கட்டளை ஊடாக இது வழங்கப்பட்டது. முள்ளியவளை சமுர்த்தி நிதிக்கட்டுபாட்டு சபைத் தலைவர் தவராசா மற்றும் பிரதேச சபை உறுப்பினர் லோகேஸ்வரன் ஆகியோர் அதைக் கையளித்தனர். (த-222)

# நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஐ.தே.கவுடன் பேசவில்லை மைத்திரி

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால, ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்தப் பேச்சையும் நடத்தவில்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தலைமை அமைச்சருக்கும், அரச தலைவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் முற்றியுள்ளதாலும், அரசைக் கொண்டு நடத்த முடியாத நிலமை ஏற்பட்டுள்ளதாலும் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்து அரச தலைவர் கலந்தாலோசித்து வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச தலைவருக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தின் பிரகாரம் நாடாளுமன்றத் தேர்தலை முன்னதாக நடத்துவதற்கான பொது வாக்கெடுப்பொன்றை நடத்த அரச தலைவர் ஆலோசித்துள்ளாரென செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல, ஐ.தே.கவிடம் இதுகுறித்து அரச தலைவர் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார். அத்துடன், பொது வாக்கெடுப்பு தொடர்பில் எவ்வித அறிவிப்புகளையும் அரச தலைவர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. அத்தகைய எண்ணம் இருக்குமாயின் அதனை அரச தலைவரே வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கை–மொட்டு இடையான பேச்சுக் கைவிடப்பட்டது



கொழும்பு, ஜூன் 18

புதிய கூட்டணியை உருவாக்குவது குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் இலங்கைப் பொதுமக்கள் முன்னணி என்பன இணைந்து நேற்று ஆறாவது கட்டமாகப் பேச்சில் ஈடுபடும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் பேச்சு கைவிடப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெறுவதாக இருந்தது. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் இரு கட்சிகளும் புதிய கூட்டணியை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது பற்றியும் தற்போதைய நாட்டின் நிலமைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய பேச்சு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (ம)

# களியாட்ட நிகழ்வில் 51 பேர் கைதாகினர்



கொழும்பு, ஜூன் 18

முகப்புத்தகத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட 51 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, பலாங்கொட, பெலிஹல்ஓய பகுதியில் உள்ள விடுதியொன்று பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த சோதனையின் போது போதைப் பொருள்கள் மற்றும் போதை மாத்திரைகள் வைத்திருந்தமை தொடர்பிலேயே குறித்த 51 பேரும் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 20 பிரகெப்லின் மாத்திரைகள், 3 ஆப்பிள் மாத்திரை, 160 மில்லி கிராம் ஹெரோய்ன், 300 மில்லி கிராம் கொக்கெய்ன், 50 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 150 கிராம் கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர். (ம)

# பதவியை இழந்தாலும் மதிப்பை இழக்காத முஸ்லிம் எம்.பிக்கள்

கொழும்பு, ஜூன் 18

அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகிய அமைச்சர்களுக்கு நாடாளுமன்றத்தில் பின்வரிசை ஆசனம் வழங்கப்படும். எனினும் கட்சித் தலைவர் கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் கபீர் ஹாசீம், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியுதீன் ஆகிய உறுப்பினர்களுக்கு தொடர்ந்தும் முன்வரிசை ஆசனம் வழங்கப்படும் என்று நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்தார்.

குறித்த அமைச்சர்களின் பதவி விலகல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நாடாளுமன்றத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதனடிப்படையிலேயே இந்த ஆசனப்பகிர்வு இடம்பெற்றுள்ளதாகவும் நரேந்திர பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார். (ம)



# சங்க பொதுநோக்கு மண்டபத்துக்கு அடிக்கல்

அளவெட்டி,ஜூன் 18

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்க பொதுநோக்கு மண்டபத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் 15 லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் இந்த மண்டபம் அமையவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அடிக்கல்லை நடுகை செய்தார்.

மேலும் நிகழ்வில் வலிதென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ .ஜெபநேசன், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-63)

# 16 மாணவர்கள் விபத்தில் காயம்

கொழும்பு, ஜூன் 18

இரத்தினபுரி - பெல்மடுல்ல தலைமை வீதியின் மொரதொட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் 16 பேர் காயமடைந்தனர்.

இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதை அடுத்தே மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. விபத்தில் காயமடைந்த மாணவர்கள் சிகிச்சைக்காக இரத்தினபுரி மற்றும் பெல்மடுல்ல மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்க பணமின்றித் துன்பப்பட்டார் ஜெனீட்டா

## ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்த சம்பவத்தில் சாட்சியம்



கொழும்பு, ஜூன் 18

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அண்மையில் தனது இரண்டு மகன்களுடன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இளந்தாய், பிள்ளைகள் இருவரையும் பாடசாலைக்குச் சேர்க்க முடியாத கவலையில் துன்புற்றார் என அவரது தாயார் செல்லையா ரீட்டா விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலை செய்துகொண்ட கொட்டாஞ்சேனை, பரமானந்த மாவத்தையைச்சேர்ந்த ஜெனிட்டா தர்ஷினி இராமையா (வயது -32), அவரது மகன்களான பிரேம்நாத் நோயல் (வயது -12), பிரேம்நாத் டியோன் க்ரிஷ் (வயது -08) ஆகியோரின் இறப்புத் தொடர்பான விசாரணைகள், கொழும்பு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இரேஷா தேஷானி முன்னிலையில் நடைபெற்றன. அதன்போது தற்கொலை செய்த பெண்ணின் தாயார் ரீட்டா மேலும் கூறியுள்ளதாவது:

'எனது மூத்த மகளும் அவரது இரண்டு பிள்ளைகளுமே இறந்துள்ளனர். முதல் குழந்தை 6 மாதமாக இருக்கும் போது மகள் அவரது கணவருடன் வெளிநாடு சென்றார். அங்கு நுழைவிசைவுப் பிரச்சினை ஏற்பட்டதால் இரு பிள்ளைகளுடன் நாடு திரும்பிய மகள் பிள்ளைகளுக்கு பாடசாலை தேடினார்.

பிள்ளைகள் வெளிநாட்டில் ஆங்கிலம் கற்றதால் இங்கு சாதாரணப் பாடசாலைகளில் சேர்க்க முடியவில்லை. முன்னைய பாடசாலைகளின் விடுப்புப் பத்திரம் இல்லாதபடியால் அவர்களைச் சேர்க்க கஷ்டமாகவும் இருந்தது.

அதனால் பன்னாட்டுப் பாடசாலைகளை விசாரித்தோம். அங்கு பெருமளவு பணம் கேட்கப்பட்டதால் மகள் மிகவும் கவலையில் இருந்தார். நான் பணம் தேடித் தருவதாகக் கூறினேன். கடந்த 13ஆம் திகதி நாங்கள் பாடசாலை ஒன்றுக்குச் சென்றோம். அங்கு பணம் கேட்டார்கள். அவ்வளவு பணம் எங்களிடம் இல்லை. பின்னர் வீட்டுக்கு வந்த மறுநாள் என்னிடம் 'அம்மா இனி உங்களுக்குத் தொல்லையாக இருக்கமாட்டோம்' என்று கூறிய மகள் தேவாலயத்துக்குச் செல்வதாகக் கூறி பிள்ளைகளுடன் சென்றார்.

14ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வீட்டில் இருந்து சென்றார். எனது பேரன்மார் இருவரும் மிகவும் கீழ்ப்படியானவர்கள். அப்பாவிப் பிள்ளைகள். அவர்களுக்குப் பாடசாலை கிடைக்கவில்லை என்று மகள் மிகவும் கவலையில் இருந்தார். அந்தக் கவலையில் மகள் இப்படிச் செய்திருக்கக்கூடும்' - என்றார்.

பிள்ளைகளுடன் தற்கொலை செய்த ஜெனிட்டா தர்ஷினியின் கணவர் டுபாயிலிருந்து கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் நாடு திரும்பியுள்ளார் எனவும், எனினும், அவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகள் மீது கவனம் செலுத்துவதில்லை எனவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (ம-22)

# கம்போடியா செல்கிறார் அரச தலைவர் மைத்திரி

கொழும்பு, ஜூன் 18
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கம்போடியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கம்போடிய அரசின் உத்தியோகப்பூர்வ அழைப்பின் பேரிலேயே அரச தலைவர் அங்கு பயணம் செல்லவுள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது.
இதற்கமைய எதிர்வரும் 26ஆம் திகதி கம்போடியா செல்லவுள்ள அரச தலைவர்இரண்டுநாள்கள்அங்கு தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
இதன்போது அவர் கம்போடிய அரச தலைவர், தலைமை அமைச்சர் உள்ளிட்ட பல முக்கிய ஸ்தர்களை சந்தித்து பேசவுள்ளார். (ம)

# ஹெரோய்ன் வைத்திருந்தாரென நபரொருவர் கைதானார்

*ஹட்டனில் சம்பவம்*

கொழும்பு, ஜூன் 18
ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஹட்டனில் வைத்து நபரொருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.
கொழும்பில் இருந்து பொகவந்தலாவ பகுதியை நோக்கி பயணித்த மகிழுந்தைச் சோதனைக்கு உட்படுத்தியபோதே மேற்படி ஹெரோய்ன் சிக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யபட்ட சந்தேக நபர் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவருக்கு 28 வயது என்றும் முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)



# களனிப் பல்கலைக்கு 60ஆண்டுகள் நிறைவு

கொழும்பு, ஜூன் 18
களனி பல்கலைக்கழகம் தனது 60ஆவது ஆண்டு நிறைவை இந்த வருடம் கொண்டாடுகிறது.
இதனையொட்டி இந்த வருடம் முழுவதும் வேலைத்திட்டங்கள் பல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. அரச தலைவரின் செயலர் உதய ஆர் செனவிரத்ன, உயர்கல்வி அமைச்சின் செயலர் பிரியந்த மாயாதுன்னே ஆகியோர் தலைமை அதிதிகளாக கலந்து கொண்டனர். (ம)

# முண்டு கொடுக்கும்போது உரிமை பற்றி பேசாமல் வேறு எப்போதுதான் அரசுடன் பேசப்போகிறீர்கள்?

## கூட்டமைப்பைப் பார்த்து மஸ்தான் எம்.பி. கேள்வி

வவுனியா, ஜூன் 18
அரசுக்கு முண்டு கொடுக்கும் காலத்தில் உரிமை பற்றிப் பேசாமல் எந்தக்காலத்தில் உரிமையை பற்றி பேசப்போகின்றார்கள். உரிமை பற்றிப் பேசியவர்கள் சமுர்த்தியைக் கொண்டுவந்து விட்டதாகவே தெரிவிக்கின்றனர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பிர் கே. கே. மஸ்தான் தெரிவித்தார்.



வவுனியாறம்பைவெட்டிகிராமத்தில் 'பிளே போய்ஸ்' விளையாட்டுக்கழகத்துக்கு உபகரணங்கள் வழங்கும நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே மேலும் தெரிவித்ததாவது:
இளைஞர்கள் தாம் வாழும் பகுதியின் வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரத்தைஉயர்த்தும்விடயங்கள்உட்பட கல்வி சுகாதார விடயங்களை மேம்படுத்தப் பாடுபட வேண்டும். அவ்வாறான இளைஞர்களுக்கு திடகாத்திரமான சூழ் நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் பொழுது போக்குக்காகவும் அவர்களை ஊக்கப்படுத்தும் முகமாகவே நாங்கள் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வருகின்றோம்.
தேர்தல் காலங்களில் சில விளையாட்டுக்கழகங்கள் தங்களுக்கு விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுத்தாருங்கள் உங்களுக்கு நாங்கள் ஆதரவு பெற்றுத்தருகின்றோம் என்பார்கள். ஆனால் நாங்கள் அதனைத் தேர்தலுக்காகப் பயன்படுத்திக்கொள்ளாமல் அவர்களுக்கு தேவையானதை வழங்கி வருகின்றோம்.
விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க நான் ஒதுக்கிய நிதி அரசியல் குழப்பங்களால் திரும்பிச்சென்றுள்ளது. எதிர்காலத்தில் அந்த நிதியைப் பெற்றுத்தருவதற்கான வழிவகைகளைச் செய்வேன்.
தற்போதைய அரசியல் சூழல் இவ்வாறே இருக்கப்போவதில்லை. வன்னியில்என்னைத்தவிர அனைவரும் ஆளும் கட்சியிலேயே இருக்கின்றனர். அவர்கள் ஆளும்கட்சியில் இருந்துகொண்டு பெரும் வேலைகளைச் செய்யக்கூடிய சூழல் இருக்கின்றது.
இந்த அரசின் நிலைப்பாடு மற்றும் செயற்பாடுகள் பிடிக்காமையால் நாம் தனித்திருக்கின்றோம். ஆட்சி மாற்றம் தற்போது வந்தாலும் சரி தேர்தல் மூலம் வந்தாலும் சரி அதில் ஆட்சியை அமைப்பவர்களாக நாம் இருப்போம்.
அந்த ஆட்சி வன்னியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்க்கட்சியாகவும் நான் ஆளும் கட்சியாகவும் மாற்றம் பெறும் நிலையாக இருக்கும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்வந்துவிட்டால்பேசுவது உரிமை பற்றியது. அதற்கான காலம் இது தான். ஏனெனில் அவர்கள் தான் இந்த அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.
இது அவர்களுக்கான காலம். இந்தக் காலத்தில் உரிமையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளாது விட்டால் எந்தக் காலத்தில் கேட்கப்போகின்றார்கள்.
உரிமையைக் கேட்கின்றார்களோ இல்லையோ சமுர்த்தியை கொண்டு வந்துள்ளதாகக்கூறுகின்றனர். சமுர்த்தி பொதுவானவேலைத்திட்டம். அதுகூட ஒழுங்கான முறையில்கொண்டு வரப்படவில்லை என்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெ ற்றுள்ளன.
வசதியானவர்களுக்குத்தான் இந்த முறை சமுர்த்தி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாகஅமைச்சருடன்கதைத்துள்ளேன்.
இந்த அரசு சிங்கள மக்களைக் குடியேற்றுவதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு குற்றம்சாட்டுகின்றது. அதனை ஊடகங்களில் பேசத்தேவையில்லை. அதனை அரசுடன் பேசவேண்டும். அவர்கள் அரசுடன் தான் இருக்கின்றனர்.
சமூக வலைத்தளங்களில் பார்க்கும் போது உரிமையை கொண்டுவந்தார்களோ இல்லையோ கிராம எழுச்சியைக் கொண்டு வந்துள்ளோம் என்று கூறுகின்றனர். இந்த வேலைத்திட்டத்தை யாரும் செய்யலாம். அமைச்சரவை அமைச்சராக இல்லாவிட்டாலும் அமைச்சராகச் செயற்படுவது தமிழ் தேசியக்கூட்டமைப்பே. அதனூடாக எவ்வளவோ வேலைகளை மக்களுக்குச் செய்யலாம். ஆனால் அதனைச் செய்வதில்லை. தேர்தல் என்று வந்ததும் சிலருக்கு இனவாதம் மட்டும் வந்து விடும் - என்றார். (த)

# ஒரு சிலரைத் தண்டிப்பதைத் தடுக்கவே முஸ்லிம்கள் கூட்டாகப் பதவி விலகினர்

## சார்ள்ஸ் எம்.பி. இப்படித் தெரிவிக்கிறார்



முஸ்லிம் அரசியல்வாதிகள் மூவர் மீது மிகப் பெரும் குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் சகல முஸ்லிம் அமைச்சர்களும் ஒன்றாகப் பதவி விலகியமை, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களைக் காப்பாற்றுவதற்காக இருக்கவேண்டும். அல்லது பயங்கரவாதத்துக்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள்.
அல்லது ஒரு சிலரைத் தண்டிப்பதை அவர்கள் விரும்ப வில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
வவுனியா ஓமந்தை சிறி சித்திவிநாயகர் கோவில் வசந்த மண்டபம் 30இலட்சம் ரூபா செலவில் கிராம மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்படவுள்ளது. அதற்கு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கிராம எழுச்சித் திட்ட நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா ஒதுக்கியிருந்தார். வசந்த மண்டபத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
கோவில் நிர்வாக சபை உறுப்பினர் வே. சந்திரமோகன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலன், நிர்வாக சபை உறுப்பினர்கள், கிராம அமைப்புக்கள், அங்குள்ள மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.
அதில் உரையாற்றுகையில் சார்ள்ஸ் மேலும் தெரிவித்ததாவது:
முஸ்லிம் அமைச்சர்களின் பதவி விலகல் ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் பயங்கரவாதிகள் அல்லது நேரடியாகக் குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.
இலங்கையில் இருக்கின்ற அரசியல் நிலைமை, பயங்கரவாத தாக்குதல், அதன் விளைவு தொடர்பாக மக்கள் நேரடியாகப் பல பாதிப்புகளை சந்திக்காவிட்டாலும் மறைமுகமாகப் பல பாதிப்புகளை சந்தித்திருக்கின்றார்கள். முஸ்லிம் அமைச்சர்கள் பதவிவிலகியுள்ளனர். குறிப்பிட்ட மூன்று நபர்கள் மீது குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்பட்டன.
தனிப்பட்ட ரீதியில் செய்யவேண்டிய விடயத்தை ஒரு சமூகம் சார்ந்து செய்திருப்பது அவர்களுடைய ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் பயங்கரவாதிகள் அல்லது நேரடியாகக் குற்றஞ் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைகிறது.
அப்படி ஒன்றாகப் பதவி விலகிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறவில்லை. அவர்கள் பதவி விலகாமல் மூன்று நபர்களையும் விசாரிக்க முயற்சித்திருந்தால் கூடுதலான விசாரணைகள் நடைபெற்றிருக்கும். தற்பொழுது ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினை யாக அது பார்க்கப்படுவதால் விசாரணைகள் எந்த அளவுக்கு நடைபெறும் அதில் எவ்வளவு உண்மைத் தன்மை இருக்கின்றது என்பது எனக்குச் சந்தேகம் தான். இலங்கையில் தற்போது அரசு நிலையற்ற தன்மையில் தான் இருக்கின்றது. அரசின் பார்வை பயங்கரவாதத் தாக்குதலையும் அரசதலைவர் தேர்தலையும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.
மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய சூழ்நிலை தொடர்பாக அரசு கூடிய கவனம் எடுக்கவில்லை. அது தொடர்பாக இனி வருகின்ற நாடாளுமன்ற அமர்வுகளில் அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவோம் என்று மேலும் தெரிவித்தார். (த)

# மங்களவுக்கு எதிராக ராஜித போர்க்கொடி!

கொழும்பு, ஜூன் 18
வெளிநாடுகளிலிருந்து சிகரட்டுக்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான சட்டங்களை நிதியமைச்சர் மங்கள சமரவீர தயாரித்தால் அவருக்கு எதிராக தீர்மானமொன்றை எடுக்க நேரிடுமென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர, வெளிநாட்டு சிகர ட்டுக்களை இறக்குமதி செய்ய நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே குறித்த விடயம் தொடர்பாக சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.
'அமைச்சரவையில் நான் இருக்கும் வரை மங்களவின் இத்தகைய யோசனையை நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் இடமளிக்கபோவதில்லை' என்று ராஜித மேலும் தெரிவித்தார். (ம)

# ஸக்ரானின் கூட்டாளி என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 18
தற்கொலை குண்டுதாரி ஸஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பினைப் பேணி வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.
வெலிமடை - பொரகஸ் சீல்மியாபுர, புதுர்திஸா மாவத்தையைச் சேர்ந்த 21 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் ஸஹ்ரானின் போதனை வகுப்புகளில் பங்குபற்றினார் என்றும், மாவனெல்லையில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுடன் நேரடி தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்றும் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம)

# அகதிகளை வெளியேற்றுவதென்பது பாரதூரமான மனித உரிமை மீறலே!

## பன்னாட்டு மன்னிப்புச் சபை காட்டம்

கொழும், ஜூன் 18
இலங்கையிலுள்ள வெளிநாட்டு அகதிகளை வலுக்கட்டாயமாக சொந்த நாட்டுக்கு வெளியேற்றுவது பாரதூரமான மனித உரிமை மீறல் என பன்னாட்டு மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.



ஆகையால் இலங்கை அரசு அகதிகளை வெளியேற்றும் செயற்பாட்டைக் கைவிட வேண்டுமென பன்னாட்டு மன்னிப்பு சபையின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பிராஜ் பட்நாயக் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் அனுசரணையுடன் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சிறுபான்மையின முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்கள் இலங்கையில் தங்க வைக்கப்பட்டனர். ஆனாலும் அண்மையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களினால் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெயர்ந்து வாழும் நிலைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் அவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்பினால், ஆயுதக் குழுக்களின் வன்முறை மற்றும் தெய்வ நிந்தனை குற்றச்சாட்டில் சாவுத் தண்டனையைக்கூட அவர்கள் எதிர்நோக்க நேரிடும். ஆகையால் குறித்த அகதிகளை நாட்டிலிருந்து வெளியேற்றும் யோசனையை கைவிட்டு விட்டு, அவர்கள் விடயத்தில் சட்டரீதியான அணுகுமுறையினை பின்பற்ற வேண்டும்.
அந்தவகையில் மனித உரிமை மீறல் வன்முறைகளுக்குள் சிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. ஆகையால் அகதிகளாக வருகை தந்துள்ள மக்களையும் ஒன்றிணைத்து தனது செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம)

# அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள்

## கபீர் ஹாசிமிடம் சஜித் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 18
மக்களுக்கானசேவையை ஆற்றுவதற்காக முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிம் மீண்டும் அமைச்சுப் பதவியை ஏற்கவேண்டுமென்று அமைச்சர் சஜித் பிரேமதாச பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.
அறிக்கைவடிவில்இந்தகோரிக்கையை முன்வைத்துள்ள சஜித், இவரது சேவை தற்போதைய நிலையில் நாட்டு மகளுக்கு அவசியமானது என்றும் வலியுறுத்தியுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினராகதேர்வாகிஅமைச்சுப்பதவிவகித்த கபீர் ஹாசிம், கடந்த சில தினங்களுக்கு முன்னர் முஸ்லிம் அமைச்சர்களுடன் இணைந்து கூட்டாக பதவி விலகினார்.
இதனையடுத்துபதவிவிலகியாரிசாத்தவிர்ந்தஏனைய முஸ்லிம்அமைச்சர்களிடம்மீண்டும்பதவிகளைஏற்குமாறுபல்வேறுதரப்பினராலும்வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில் அமைச்சர் சஜித் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும். (ம)

# அமைச்சுப் பதவியை பொறுப்பேற்கத் தயார்

## கபீர் ஹாசிம் பதில்

கொழும்பு, ஜூன் 18
அமைச்சுப் பதவியை மீண்டும் ஏற்றுக்கொள்ளத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.
கேகாலை - அம்பன்பொல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டோம். அதே போன்று எனது மாவட்ட மக்களும் பதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். ஆகவே கட்சியும், அரசும் குறித்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதாயின் மீண்டும் பதவியைப் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன். எனது மாவட்ட மக்களின் வேண்டுகோளுக்குத் தலைசாய்த்து மீண்டும் பதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளேன் - என்றார். (ம)

# அரச தலைவர் வேட்பாளராக சமல் ராஜபக்சவே வேண்டும்!

## அஸ்கிரிய மகாநாயக்கரின் விருப்பம் இது

கொழும்பு, ஜூன் 18
முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ போன்ற ஒருவர் அரச தலைவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்தார்.
கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொசன் நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்பொழுது கிடைத்த மிகவும் மகிழ்ச்சியான செய்தி எதுவென்றால் எதிர்காலத்தில் அரச தலைவர் ஆகுபவர் என எமது சமல் ராஜபக்ஷ என்பதே. இதை உண்மையிலேயே நான் அறிந்திருக்கவில்லை. நான்



மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதே வேளை நாடு நாசமடைந்ததற்கு ஐக்கிய தேசிய கட்சியே பொறுப்புக் கூறவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# மகியங்கனை வனப்பகுதியில் நேற்றுத் தீ

மகியங்கனை, ஜூன் 18
ரந்தனிகல மகியங்கனை முதன்மை வீதியை அண்மித்து அமைந்துள்ள நீர்தேக்கத்துக்கு அப்பால் காணப்படும் வனப்பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.
இந்த தீப்பரவல் காரணமாக இந்த வனத்தில் நேற்று மாலைவரை 3 ஏக்கர் வரையான இயற்கை வளம் எரிந்து நாசமாகியுள்ளது.
வனப்பகுதிக்கு மிருக வேட்டைக்காக சென்றவர்கள் இவ்வாறு தீ வைத்திருக்கக் கூடும் என வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம)

# கோரிக்கைகள் நிறைவேறும் வரை பதவியேற்காமல் இருப்பது நல்லது

## ரிசாத் இப்படித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 18
எமது கோரிக்கைகளை நிறைவேறும் வரையில் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே நல்லது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியுள்ள நிலையில், மீண்டும் பதவியேற்குமாறு பல தரப்பினரிடமிருந்தும் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுக்கப்படும் நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நாங்கள் பதவி விலகும்போது அரசுக்கு பல கோரிக்கைகளை முன்வைத்தோம். அந்த கோரிக்கைகள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக எம்மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ஒரு மாதகாலத்துக்குள் தீர்வு பெற்றுத்தரவேண்டும்.
அத்துடன், குருணாகல், மினு வங்கொடை பிரதேசங்களில் இனவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்பதுடன் இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என தெரிவித்திருந்தோம்.
அதேபோன்று இனவாத தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் என கைதுசெய்யப்பட்ட 450க்கும் அதிகமானவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் சிறுசிறு காரணங்களுக்காக முஸ்லிம் மக்கள் கைதுசெய்யப்பட்டு பிணை வழங்க முடியாத வகையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தோம்.
வெறுப்பூட்டும் வகையில் பேசுவதற்கு எதிராக சட்டம் நிலைநாட்ட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தோம். இவை எதுவும் இன்னும் அரசால் நிறை வேற்றப்படவில்லை - என்றார். (ம)

# முஸ்லிம் அரசியல்வாதிகள் பதவிகளுக்குவரவேண்டும்!

## குமார வெல்கம அழுத்தம்



கொழும்பு, ஜூன் 18
பதவி விலகிய முஸ்லிம் அரசியல்வாதிகள் மீண்டும் தமது அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, கூட்டாக பதவி விலகியமை பன்னாட்டு மட்டத்தில் தவறான நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒரு சிலரின் தவறான செயற்பாடுகளைக் கொண்டு ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பது முற்றிலும் தவறானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் அரசியல் பரப்புரையாகவே எடுத்துக்கொண்டன. பொறுப்புடன் செயற்பட வேண்டிய அரசியல்வாதிகளும் பொறுப்பற்ற விதமாக கருத்துக்களைகுறிப்பிட்டுபிரச்சினைகளைத்தீவிரப்படுத்தியுள்ளார்கள். அரசியல் தேவைகளுக்காக எல்லை மீறி செயற்பட்டுள்ளமையினால் சாதாரண மக்கள் இன்று பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார். (ம)

# இடி மின்னலால் ஒருவர் இறப்பு

## மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு, ஜூன் 18
மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பலமான இடிமின்னலுடன் மழை பெய் தது. மின்னல் தாக்கியதால் மட்டக்களப்பைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.
இதேவேளை வவுணதீவு பிரதேசத்தில் இலுப்படிச்சேனை, கொத்தியாபுலை, தாண்டியடி, காஞ்சிரங்குடா, புதுமண்டபத்தடிஉள்ளிட்ட இன்னும் சில பகுதிகளில் வீசிய பலத்த காற்றால் அங்கிருந்த சுமார் 50க்கும் மேற்பட்ட வீடுகளின் கூரைகள் கழற்றி வீசப்பட்டனஎன்றுகுடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (ம)

# யாசகத்தில் சேமித்த பணத்தில் தானம் கொடுத்த அப்புஹாமி!

கொழும்பு. ஜூன் 18
பொசன் தினத்தை முன்னிட்டு அப்புஹாமி என்ற யாசகர் ஒருவர் கேக் மற்றும் வில்வம்பூ தேநீர் பொசன் தானத்தை நேற்று மாத்தறையில் வழங்கியுள்ளார். 75 வயதுடைய இவர் சுமார் 40 ஆயிரம் ரூபாவை செலவிட்டு மாத்தறை மாநகர சபை முன்றலில் இந்த தானத்தை அவர் வழங்கியுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
மத்துகமவை சேர்ந்த நான் எனது மனைவி இறந்த பின்னர் மாத்தறைக்கு வந்து யாசகத்தில் ஈடுபட்டு 13 வருடங்கள் ஆகின்றன. நாளொன்றுக்கு இரண்டாயிரம் கிடைக்கும். சில நாள்களுக்கு இருநூறு - முன்னூறே கிடைக்கும். தெவிநுவர பஸ் தரிப்பிடத்தில் இரவு தூங்குவேன்.
இப்படி சேகரித்த பணத்தை ஒரு வர்த்தகரிடம் கொடுத்து சேர்த்தே இந்தத் தானத்தை நடத்துகிறேன் .கடந்த வருடம் ரோஸ்பான் தானம் கொடுத்தேன். அடுத்த வருடம் அன்னதானம் ஒன்றை வழங்க யோசித்துள்ளேன். ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட நாய்கள் பூனைகளென 100 பிராணிகளுக்கு முடிந்த உணவை அளிப்பேன். எனக்கு பிச்சையளிக்கும் மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் இந்த தானத்தை வழங்கினேன்.என்றார். (எ)

## கொருடாவில்...

டிருப்பதைக் காணி உரிமையாளர் கண்டுள்ளார். அதையடுத்து அவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். 15 பொதிகளாகப் பொதி செய்யப்பட்ட 30 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## ஷாபிக்கு...

தடுக்கும் எந்தச் சிகிச்சைகளையும் அவர் வழங்கியமைக்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியிருந்த போதிலும், அவருக்கு எதிரான முறைப்பாடுகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன. அவருக்கு எதிராக நேற்று வரை மொத்தமாக ஆயிரத்து 60 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.
குருணாகல் மருத்துவனையில் அவருக்கு எதிராக 827 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதேவேளை, தம்புள்ளை மருத்துவமனையில் 164 முறைப்பாடுகளும், தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் 69 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.
மருத்துவர் ஷாபி சிசேரியன் சத்திர சிகிச்சை என்ற போர்வையில் சிங்களப் பெண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர், கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். இந்தநிலையில் அவருக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.
குருணாகல் மற்றும் தம்புள்ளை ஆகிய வைத்தியசாலைகளில், மருத்துவர் ஷாபியிடம் சிசேரியன் சத்திர சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்களே தங்களது முறைப்பாடுகளைப் பதிவு செய்து வருகின்றனர்.
அதேவேளை எதிர்வரும் 27ஆம் திகதி குருணாகல் நீதிமன்றத்தில் மருத்துவர் ஷாபி மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நடைபெறவுள்ளது. (எ-22)

## சவால்கள்...

தெரிவித்தார்.
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்திய வடக்கு மாகாண ரீதியிலான விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத்தின் தலைவர் சே.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களின் அரசியல் பயணத்திலே பல வித்தியாசமான தசாப்தங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால், இன்று நாங்கள் இருக்கின்ற சூழல் இதற்கு முன்னெப்போதும் இல்லாத சூழலாக இருக்கின்றது.
எங்களுக்கு உகந்த ஒரு சூழலை நாம் உருவாக்கிவிட்டோம்என்றுநினைத்திருந்தபோது அந்தச் சூழலே எங்களுக்கு மாறானதாகவும், நாங்கள் சறுக்கி விழக்கூடியதாகவும், விழுந்தால் பாரிய காயம் ஏற்படக்கூடியதாகவும் இன்று எங்கள் முன்னால் இருந்து கொண்டிருக்கின்றது.
மிக நிதானமாக, மிக கவனமாக நாங்கள் எங்களது மக்களது நலன்களை முன்னிறுத்தி முன்னேற வேண்டிய காலமாக இது இருக்கின்றது. இந்த வருடத்தில் இவை எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய வேண்டும். எமது நீண்டகால இலக்குகளை அடைவதற்கான வழிகள் என்ன? பொதுமக்களினது நலன்களை அடைவதில் அவர்களுக்கு எப்படித் தலைமைத்துவம் கொடுக்க முடியும்? என்பது குறித்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலமாக இது இருக்கின்றது.
இது இலகுவான ஒரு சவால் அல்ல. முன்னெப்போதும் இல்லாத பலத்த சவால். இது கஷ்டம் என்று கைவிட்டுவிட்டு நாங்கள் ஓடிவிட முடியாது. நிச்சயமாக முகம் கொடுக்க வேண்டிய ஒரு சவாலாக இது இருக்கின்றது. எனவே, இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து தமிழ் மக்களின் இலக்கை நாம் அடைந்தே தீருவோம்.
வாழ்க்கையில் தோல்வியைச் சந்திப்பது எப்படி, தோல்வியைக் கையாள்வது எப்படி, ஏமாற்றங்களுக்கு முகம் கொடுப்பது எப்படி என்பதை விளையாட்டுத்திடலில்தான் நாம் முதலில் கற்றுக்கொள்கின்றோம். வாழ்க்கையிலேயே பல தோல்விகளை நாம் சந்தித்தே ஆகவேண்டும். பல ஏமாற்றங்களுக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும். அவை இறுதி முடிவாக இருக்கக்கூடாது. அந்தத் தோல்விகள். ஏமாற்றங்கள்தான் வெற்றிக்கான படிகளாக இருக்கவேண்டும். இறுதியில் நாம் வென்றே ஆகவேண்டும். எனவே, இன்றைய சூழ்நிலையிலே இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் என்றுமில்லாத அளவுக்கு அத்தியாவசியமானதாகும் -என்றார். (எ-22,173)

## 2015 ஆம் ஆண்டு...

தேசிய கட்சியின் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் கொள்கைகளையும் அவர் நாடு மீது கொண்டு தனித்துவப் பற்றையும் இன்று எவரும் முன்னெடுத்து செல்லவில்லை. முறையற்ற விதத்தில் செயற்படும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆயுள்காலம் முடிவடைந்து வருகின்றது.
ஐக்கிய தேசிய கட்சியே அழிவைத் தேடிக் கொண்டது. எவரும் ஏற்படுத்தவில்லை என அஸ்கிரிய பீட மநாயக்க தேரர் வரகாகொட சிறி ஞானரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளமைக்கு அரசின் நிலைப்பாடு என்ன?.
2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் செய்த தவறினை இன்று நன்கு புரிந்துக் கொண்டுள்ளார்கள். மக்கள் மத்தியில் சென்று வாக்கு கோருவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கத்துக்கு எவ்வித தகைமையும் கிடையாது - என்றார். (எ)

## வீதியில்....

முன்பாக நேற்று முற்பகல் நடந்துள்ளது.
இருபாலை விளம் வீதியைச் சேர்ந்த பா. பரிதா (வயது-30) என்பவரே உயிரிழந்துள்ளார். அவரது மூத்த சகோதரன் பா.ஜெயபாலன் (வயது-35) காயத்துடன் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தக் கொடூரச் சம்பவத்துக்குக் காணிப் பிணக்கே காரணம் என்று கூறப்படுகின்றது. காணிப் பிணக்கால் அயலவர்களான உறவினர்களுக்கு இடையே நீண்டகாலமாகப் பிணக்கு இருந்தது என்றும் அதன் தொடர்ச்சியாகத் சிறிய தந்தை இந்தக் கொடூரச் செயலைப் புரிந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
கந்தவேள் பாடசாலைக் முன்பாக வைத்துச் சிறிய தந்தை பெறாமகனுக்கு வயிற்றில் கத்தியால் குத்தியுள்ளார். அவர் நிலத்தில் சரிந்து விழுந்துள்ளார். கத்தியால் குத்தியவர் ஈருருளியில் ஏறிக் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குப் புறப்பட்டுள்ளார். அப்போது வழியில் பெறாமகளைக் கண்டுள்ளார். அவரைக் கத்தியால் குத்த முயன்றபோது அந்தப் பெண் சிறிய தந்தையை தள்ளி வீழ்த்தி விட்டுத் தப்பி ஓடியுள்ளார்.
அவரைச் சிறிய தந்தை துரத்திச் சென்றுள்ளார். தப்பியோடிய பெண் தடுமாறி விழுந்த போது சிறிய தந்தை அவரது கழுத்தில் பல தடவை குத்திக் கொலை செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26)

## அடுத்த...

நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக ஆராயவுள்ளது.
இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நாடாளுமன்ற அமர்வு கூடவுள்ள நிலையில் அதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடுகின்றது. இதன்போது இந்த விடயத்தைத் தாம் ஆராயவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.
கடந்த 9ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், தமிழர் தரப்பின் சார்பில் அவருடன் சந்திப்பை நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து இந்திய மத்திய அரசு அதிக கரிசனை காட்ட வேண்டும்என்றகோரிக்கையை முன்வைத்திருந்தனர். இது குறித்து ஆழமானதும் ஆரோக்கியமானதுமான கலந்துரையாடலை முன்னெடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் புதுடில்லிக்கு வரவேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகர்வுகள் தொடர்பிலும் இன்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் மாவை சோ சேனாதிராஜா தெரிவித்தார். (எ-22)

## வாள்வெட்டுக்...

தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
யாழ்ப்பாணத்தில் இயங்குவது ஆயுத குழுவாகும். அரசியல் கட்சி அல்ல. ஆயுதக் குழுவை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் பேச்சுக்கு அழைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு பேச்சுக்கு அழைத்தது நாட்டின் சட்டம் ஒழுங்குக்கு முரணாகும்.
வாள்வெட்டுக் குழுவைப் பேச்சு அழைத்தமை அவர்களுக்கு அங்கிகாரம் கிடைத்தது போலாகும். சாதாரணமாக செயற்பட்டுவந்த இவர்கள் இதன் பின்னர் தீவிரமாக செயற்படலாம். ஆளுநரின் நடவடிக்கையானது அவர்களை மேலும் பலமடைய செய்வதாகும். இதனை அவர் செய்யக்கூடாது.
ஆயுத குழுவைப் பயங்கரவாத தடைச் சட்டதின் கீழ் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலமே பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தலாம். மாறாக அவர்களுடன் பேச்சு நடத்த அழைப்பு விடுப்பதானது மேலும் அவர்களை பலப்படுத்தவதாக அமையும் - என்றார். (எ)

## பரபரப்புக்கு....

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக மகிந்த அணியான பொது எதிரணி கேள்வி எழுப்பும் எனத் தெரியவருகின்றது.
நாடாளுமன்ற அமர்வையொட்டி ஆளுங்கட்சி நாடாளுமன்றக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை பிரதமர் தலைமை அமைச்சர் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.
அதேவேளை, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரவாக ஆராயப்படவுள்ளன.
அத்துடன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று காலை 9.30 மணியளவில் அமைச்சரவைக் கூட்டமும் நடைபெறவுள்ளது.
தற்போது கொழும்பு அரசியலில் பலத்த இழுபறிகள் காணப்படும் நிலையில் நாடாளுமன்றம் கூடுவது பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ-22)

## கொக்குவில்....

பெட்டி உட்படப் பெறுமதியான பொருள்கள், தளபாடங்கள் சேதமாகியுள்ளன. வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாகத் தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டுள்ளனர்.
தாக்குதல் நடத்தியவர்கள் மானிப்பாய் வீதி வழியாக வாள்களுடன் தப்பிச் சென்றதைப் பொதுமக்கள் அவதானித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.
அதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வாள்வெட்டுத் தாக்குதல்களில் ஈடுபடுவோருடன் பாதுகாப்பு இன்றி எந்த இடத்திலும் பேச்சு நடத்தத் தயார் என்று கூறியிருந்தார். அவரது கூற்றுத் தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்திருந்த நிலையில் நேற்று பகல் வேளையில் கொக்குவில் பகுதியில் வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், அங்கிருந்து தப்பித்தும் சென்றுள்ளனர்.
பகல் வேளைகளில் வாள்களுடன் உந்துருளிகளில் பயணித்துத் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு கும்பல்கள் தப்பிச் செல்கின்றமை தொடர்பாகப் பொதுமக்கள் கடும் விசனத்தையும், சந்தேகங்களையும் தெரிவிக்கின்றனர். (எ-26,21)

## பிரி. அடுத்த தலைமை அமைச்சர்? முன்னிலையில் பெரிஸ் ஜோன்சன்

லண்டன், ஜூன் 18
பிரிட்டனின் தலைமை அமைச்சரான தெரேசா மே தனது பதவியைத் துறப்பதாக அறிவித்துள்ள நிலையில், பிரிட்டனின் அடுத்த தலைமை அமைச்சருக்கான போட்டி ஆரம்பமாகியுள்ளது. அந்த இடத்தை நிரப்புவதற்குப் பலமான போட்டி நிலவுகிறது. இதற்கான போட்டியில் 10 போர் களத்தில் உள்ளனர். இவர்களில் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக லண்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் முதலாவது சுற்று வாக்கெடுப்பு இடம்பெற்றது. தற்பொழுது பிரிட்டனின் அயலுறவு அமைச்சராக உள்ள பெரிஸ் ஜோன்சன் அதில் 114 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார். பிரெக்சிட் விவகாரத்தில் எப்படியாவது ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டுப் பிரிட்டன் வெளியேறியே ஆகும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே ஜோன்சன் இந்தப் பேராதரவைப் பெற்றார் என்று குறிப்பிடப்படுகிறது.
பிரெக்சிட் விவகாரத்தில் நாடாளுமன்ற ஆதரவைப் பெற முடியாததாலேயே தெரேசா மே பதவி விலகுவதாக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# சோமாலியாவில் தாக்குதல்கள்

### அதிபர் மாளிகை அருகேயும் குண்டுவெடிப்பு
### 11 பேர் சாவு - பலருக்குக் காயம்

மெகாடிசு, ஜூன் 18
சோமாலியாவில் அடுத்தடுத்துக் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன.
சோமாலியவின் தலைநகர் மெகாடிசுவிலுள்ள அதிபர் மாளிகை அருகே அமைந்திருந்த பொலிஸ் சோதனைச் சாவடியைக் குறிவைத்து நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 9பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிச் சாவடைந்தனர். குண்டுகள் நிரப்பப்பட்ட மகிழுந்தைச் செலுத்திச் சென்று மோதியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.
அந்தப் பகுதி அனைத்தும் தீக்கிரையாகினது. இதனால் அங்கு கரும்புகை மண்டலம் உருவானது. இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கிய 25 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். இந்தக் குண்டுவெடிப்பு நடந்த சில மணி நேரத்துக்குப் பின்னர், மொகாடிசுவில் உள்ள பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்குச் செல்லும் வீதியில் மற்றொரு மகிழுந்து வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதலில் 2 பேர் சாவடைந்தனர்.

**பின்னணி.**
சோமாலியாவில்அல்கொய்தா ஆயுத அமைப்பின் ஆதரவு பெற்ற அல்ஷபாப் ஆயுததாரிகள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.
பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து இவர்கள் தாக்குதல்களை நடத்துகின்றனர்.
இந்த இரட்டைக் குண்டுத் தாக்குதல்களுக்கும் அல்ஷபாப் ஆயுததாரிகளே பொறுப்பேற்றுள்ளனர்.

## இந்தோனேசியாவில் 6.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

ஜகார்த்தா, ஜூன் 18
இந்தோனேசியாவில் நேற்று 6.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள கட்டடங்கள் குலுங்கின. இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கமானது அங்குள்ள டிமோர் தீவில் உள்ள குபா ங் நகரில் இருந்து வடமேற்கில் 133 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், ஏற்பட்ட பாதிப்பு மற்றும் சேத விவரம் வெளியாகவில்லை.
சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. பசுபிக் கண்டத் தகடுப் பகுதியில் உள்ள இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம், எரிமலை போன்ற பேரிடர்கள் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.



# கப்பல்களை தாக்கியது ஈரானே!

### அமெ.வைத் தொடர்ந்து சவூதி தெரிவிப்பு



ரியாத், ஜூன் 18
ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான 2 கப்பல்கள் தாக்கப்பட்டிருந்த நிலையில், ஈரான் தான் இந்தத் தாக்குதலை மேற்கொண்டது எனச் சவூதியின் முடிக்குரிய இளவரசர், அந்த நாட்டுப் பத்திரிகையான அசாக் அல் அவுசாட் இற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் கூறினார். தாங்கள் இது தொடர்பாகப் பன்னாட்டுச் சமூகத்திடம் முறையிடவுள்ளதாகவும், வளைகுடாவில் போர் ஏற்படுவதைச் சவூதி விரும்பவில்லை எனவும், எங்களை எந்த நாடாவது அச்சுறுத்த முயன்றால் அதற்குத் தகுந்த பதிலடிகொடுக்கவும் தயங்கமாட்டோம் எனவும் அவர் அதில் மேலும் கூறின்ார். ஈரானே கப்பல்களைத் தாக்கியதாக அமெரிக்காவுக்கு அடுத்துச் சவூதி கூறியிருக்கும் நிலையில், இந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என ஈரான் மறுபடியும் தனது மறுப்பை வெளியிட்டது.

**பின்னணி**
சவூதி அரேபியாவுக்கும், ஈரானுக்கும் இடையே நீண்ட காலமாகப் பகைமை நிலவி வருகிறது. சவூதியின் நட்பு நாடாக அமெரிக்கா உள்ளது. ஈரானுடன் அமெரிக்கா செய்திருந்த அணு உடன்படிக்கையில் இருந்து ட்ரம்ப் அதிபரானவுடன் அமெரிக்கா விலகியது. ஈரான் மீது தடைகளை விதித்தது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே முரண்போக்கு அதிகரித்தது. இந்த நிலையில் அமெரிக்காவின் போர்க் கப்பல் வளைகுடாப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அத்தோடு வளைகுடாப் பகுதியில் 4 எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதலுக்கு உள்ளான 4 கப்பல்களில் 2 சவூதி அரேபியாவுக்குச் சொந்தமானது என்பதால் அமெரிக்கா இந்த விவகாரத்தைக் கையில் எடுத்து ஈரானை மிரட்டி வருகிறது.

சமையல் மோசடி

## நெதன்யாஹூவின் மனைவிக்கு தண்டனை விதித்த நீதிமன்று

ஜெருசலோம், ஜூன் 18
இஸ்ரேலின் தலைமை அமைச்சர் நெதன்யாஹூ வின் மனைவி, அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை உறுதிசெய்யப்பட்டதையடுத்துக் குற்றப்பணமாக அவர் 15ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும் என்று அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தலைமை அமைச்சரின் இல்லத்தில் சமையலாளி இல்லை என்று பொய் கூறிய நெதன்யாகுவின் மனைவி சாரா நெதன்யாஹூ, சமைப்பவர்களை ஏற்பாடு செய்ததன் மூலம் 99ஆயிரத்து 300அமெரிக்க டொலர்களைச் செலவு செய்தார். அவர் மீது மோசடி மற்றும் நம்பிக்கைக்கு விரோதமாக நடந்து கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. தன் மீதான குற்றத்தைச் சாரா நெதன்யாஹூ மறுத்தார். நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் நடந்து வந்தன. பின்னர் நீதிமன்றில் தனது குற்றத்தை அவர் ஏற்றார். இந்த நிலையிலேயே குற்றப் பணம் அறவிட்டு அவரிழைத்த குற்றத்துக்குத் தண்டனை விதித்தது அந்த நாட்டு நீதிமன்றம்.





# வெனிசுலாவின் அகதிகளால் நிரம்பி வழிகிறது பேரு நாடு

### தடைச் சட்டத்துக்கு யோசனை

லிமா,ஜூன் 18
வெனிசுலா மக்களில் 10 சத்வீதமானோர் வெனிசுலாவை விட்டு வெளியேறியுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பி டப்பட்டுள்ளது.
இந்தப் பத்து சதவீதமானவர்களில் 8இலட்சம் பேர் பேரு நாட்டில் தஞ்சமடைந்துள்ளதாகப் பேரு நாட்டின் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்தது. இதனால் அகதிகளை மேலும் உள்வாங்க இயலாத நிலைக்குப் பேரு அரசு தள்ளப்பட்டுள்ளது.
இதனால் அகதிகள் உள்வாங்கலுக்குப் புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.
அந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கிடையில் பேரு நாட்டுக்குள்புகுந்துவிடுவதற்காக வெனிசுலா மக்களில் பலர் பேருவின் வட எல்லையில்.கூடியுள்ள னர்.

**பின்னணி**
வெனிசுலாவில் நீடித்து வருகின்ற நிலையற்ற அரசியல், பொருளாதார மந்த நிலை காரணமாக அங்கு உணவு, மருந்து, எரிபொருள் எனச் சகல பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. வெனிசுலா மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொண்டுள்ளனர்.
வெனிசுலாவின் அதிபர் நிக்கேலஸ் மதுரோவுக்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவுடன் அந்த நாட்டின் எதிர்க் கட்சித்தலைவர் ஜுவைன் குவைடோ செயற்பட்டு வருகிறார். வெனிசுலாவில் வாழ முடியாத சூழலில் அந்த நாட்டு மக்களில் பலரும் வெனிசுலாவை விட்டு வெளியேறி வருகின்றனர்.

# நைஜீரியாவில் தற்கொலைத் தாக்குதல் 30 பேர் சாவு - 40 பேர் படுகாயம்

கனோ, ஜூன் 18




நைஜீரியாவில் நேற்று நடந்த தற்கொலைத் தாக்குதலில் 30 பேர்கொல்லப்பட்டனர். நைஜீரியாவின்போர்னோமாநிலத்தில் உள்ள கொண்டுகா பகுதியில் இந்தச்சம்பவம்நடந்தது. அங்கு கால்பந்துப் போட்டி ஒன்றைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தவர்களை இலக்குவைத்துமேற்கொள்ளப் பட்டதாக்குதல்களிலேயேஇந்த 30பேரும் சாவடைந்தனர். சாவடைந்தவர்களைத் தவிர 40 பேர் படுகாயம்அடைந்தனர். இந்தத்தாக்குதலுக்குப் போகோஹராம் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

4 தற்கொலைதாரிகள் இந்தத் தாக்குதல்களை நடத்தியதாகவும், அவர்களில் 3 பேர் பெண்கள் என்றும் ஒருவர்ஆண்எனவும்முதற்கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில்1பெண் ஆயுததாரி கொண்டுவந்த வெடிகுண்டு வெடிக்கவில்லை என்றும் அவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர் என்றும்கூறப்படுகிறது. நைஜீரியாவில்போகோஹராம்ஆயுததாரிகளுக்கும், நைஜீரிய இராணுவத்தினருக்கும் இடையே நீண்ட நாள்களாக மோதல் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் மூளைக் காய்ச்சல் 93 குழந்தைகள் பரிதாபச் சாவு



புதுடெல்லி, ஜூன் 18

இந்தியாவின் பீகார்ப் பகுதி முசாபர்பூரிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணா மருத்துவமனையில் 93 குழந்தைகள் சாவடைந்தனர்.

கடந்த வாரத்தில் மாத்திரம் பதிவான இந்தச் சாவுகள் அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளன.

குழந்தைகளின் இந்தத் தொடர் சாவுகளுக்குக் காரணம் மூளைக் காய்ச்சல் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியச் சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் குறித்தமருத்துவமனைக்கு நேரில் சென்று நிலமையைப் பார்வையிட்டார்.

அங்கு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்த பிரச்சினைக்கான காரணம் குறித்து மருத்துவர்களிடையே வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

ஒருவித மூளை காய்ச்சலான இது லிச்சி பழத்தால் ஏற்பட்டதாகவும், குழந்தைகளின்உடலிலுள்ளகுறைந்தளவு குளுக்கோசே இதற்குக்காரணமென்றும்மருத்துவத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

# சவூதியின் வானூர்தி நிலையம் மீது ஹவுத்தி போராளிகள் தாக்குதல்

சனா, ஜூன் 18

சவூதிஅரேபியாநாட்டின்அப்ஹாவானூர்திநிலையம் மீது தாக்குதல் நடத்தியதாக ஏமனில் உள்ள ஹவுத்திப் போராளிகள் தெரிவித்தனர். சவூதி ஏமன்நாட்டின்எல்லைப்பகுதியில்இருந்துசுமார் 200கிலோமீற்றர்தூரத்தில்அப்ஹாஎன்றநகரில் அமைந்துள்ளசவூதிக்குச்சொந்தமானவானூர்தி நிலையமே இவ்வாறு தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலை ஆளில்லா வானூர்திகள் மூலம் ஏவுகணைகளை வீசி மேற்கொண்டதாகக் ஹவுத்திப் போராளிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதல் தொடர்பாகச் சவூதி அரசு அதிகாரப்பூர்வத் தகவல் எதையும் வெளியிடவில்லை. இந்தச் சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டால்கடந்தஒருவாரகாலத்தில் அப்ஹா வானூர்தி நிலையம் மீது நடத்தப்பட்ட நான்காவது தாக்குதலாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.






# ஹொங்கொங்கில் நீடிக்கிறது போராட்டம் மன்னிப்புக் கோரினார் தலைமை நிர்வாகி

ஹொங்கொங், ஜூன் 18

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் நாடாளுமன்றில் சீனா சார்புச் சட்டம் ஒன்று நிறைவேற்றத்துக்காக முன்வைக்கப்பட்டிருந்த இந்த நிலையில் அதற்கு எதிராகக் ஹொங்கொங்மக்கள்போராட்டம்நடத்தினர். மக்களின் போராட்டத்துக்குப் பணிந்தஹொங்கொங்கின்தலைமை நிர்வாகி அந்தச் சட்டத்திருத்தத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். ஆனாலும்,

இதற்காக அவர் மன்னிப்புக் கோரிப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி மக்களின் போராட்டம் தொடர்ந்தது. அதையடுத்துத்தலைமைநிர்வாகி மன்னிப்பும் கோரினார். ஹொங்கொங் முற்றாக முடங்கும் அளவுக்கு 20 லட்சம் பேர்வரையில் திரண்டு போராட்டம் நடத்தியதால், தலைமை நிர்வாகி கேரி லாம் மன்னிப்புக் கோரினார். ஆனால், அவர் பதவி விலக மறுத்தார்.



**பின்னணி**

ஹொங்கொங்கின்குற்றவாளிகளைச் சீனாவிடம் ஒப்படைக்கும் வகையில் ஹொங்கொங்நாடாளுமன்றில்நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தைச்சுட்டிக்காட்டிப்போராட்டம் ஆரம்பித்தது.

இந்தச் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் முடிவிலிருந்து ஹொங்கொங் பின்வாங்காத தால் போராட்டம் வலுப்பெற்றது. பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.

மக்கள் எழுச்சி அதிகரித்தது. போராட்டத்தின் வீச்சு ஹொங்கொங் முழுவதையும் முடக்கியது.



# இன்றைய நாள்

**மேடம்:** சுயநலத்துடன் சிலர் உதவி செய்ய முன் வருவர். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் பலம் பெறும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**இடபம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில் வியாபாரம் சீர் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிம்மம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடுகிற சிரமத்தை சரி செய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணக்கடனில்பெரும்பகுதியைச்செலுத்துவீர்கள்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். பிள்ளையைக் கண்டிப்பதில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையைஅறிந்துநிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச் சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். உறவினர் வருகை யால் பெண்களுக்கு வீட்டுச் செலவு எகிறும். உடல்நலனுக்காக சிகிச்சை தேவைப்படலாம்.

# குருநகர் பாடும்மீன் கிண்ணம் வென்றது








யாழ்ப்பாணம், ஜூன் 18
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் குருநகர் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூயஒளிவெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் நிர்ணயிக்கப் பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களை பதிவு செய்யாதவிடத்து முதல்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி சார்பில் சாந்தன் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அந்த அணியின் வீரர் கீதன் இன்னுமொரு கோலைப் போட்டார். பதிலுக்கு மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியினர் ஒரு கோலைப் பதிவு செய்தது. ஆட்ட நேரமுடிவில் குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரராக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வீரர் சாந்தன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கோல்காப்பளராக மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக கோல்காப்பளார் பிருந்தாபன் தெரிவானார். (23)

## பொற்பதி இந்து வாகை

யாழ்ப்பாணம், ஜூன் 18
அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையத்தின 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சிறிகலைமகள் விளையாட்டுக்கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்திய மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி இந்து விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து விளையட்டுக் கழக அணி 6 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக றொசான் 35 ஓட்டங்களையும், தீபன்17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சஞ்ஜீ 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு களமிறங்கிய அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி 5.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 28 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அணி சார்பில் டிலோசன் 19 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார் பந்துவீச்சில் சத்தியன், தீபன், அஜந், ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (23)

## கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அணி கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 18
முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 'இருபாலருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அணியை எதிர்த்து வெலிஓயா பிரதேச செயலக அணி மோதியது. இதில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அணி முதல் இரண்டு செற்களை 25:23, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெற்று வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேசசெயலக அணியை எதிர்த்து துணுக்காய் பிரதேச செயலக அணி மோதியது. இதில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அணி முதல் இரண்டு செற்களை 25:14, 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெற்று வெற்றி பெற்றது. (23)







## யாழ்.போதனா அணி கிண்ணத்தை சுவீகரித்து

யாழ்ப்பாணம், ஜூன் 18
கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண சுகாதார நிறுவனாங்கள் மற்றும் முதன்மை செயலர் அலுவலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் யாழ்.போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி கிண்ணம் வென்றது.

உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அணியை எதிர்த்து யாழ். போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் எந்தவிதமான கோல்களையும் பதிவு செய்யவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணிகளும் விறுவிறுப்பாக ஆடினர். இருந்தும் ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் யாழ்.போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி வீரர் சுலக்சன் ஒரு கோலைப் போட்டார். இறுதியில் யாழ். போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர் ஆட்டநாயகனாக யாழ். போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணியின் தலைவர் கௌதமன் தெரிவு செய்யப்பட்டார். (23)



### கால்பந்தாட்டத் தொடர்;

## புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் வசமானது கிண்ணம்



யாழ்ப்பாணம், ஜூன் 18
அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் புதுக்குடியி ருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

அருணோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம் பெற்ற இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணிகளும் எந்தவிதமான கோல்களையும் பெறாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் புதுக்குடியி ருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்தவீரராகசெந்தமிழ்விளையாட்டுக்கழக அணி வீரன் தர்சிகன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்டநாயகனாக புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணி வீரர் உதயவாமன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த கோல்காப்பளராக புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணியின் கோல்காப்பளார் சுதேஸ்வரன் தெரிவானார். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்க ளாக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், மருதங்கேணி கோட்டக் கல்வி பணிப்பாளர் ச.திரவியராசா, பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான வே பிரசாந்தன் முன்னாள் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான சந்திரலிங்கம் சுகிர்தன், கேசவன் சயந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (23,160,173)




# இம்ரான்கானின் கோரிக்கையை நிராகரித்த சர்பிராஸ்கான்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் பரிகிஸ்தானின் முன்னாள் வீரரும், தற்போதைய பாகிஸ்தான் தலைமை அமைச்சருமான இம்ரான்கான் வீரர்களுக்கு தனது ருவிற்றரில் சில அறிவுரைகளை வழங்கியிருந்தார். இறுதிப் பந்து வரை போராடும் படியும், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றால் முதலில் துடுப்பெடுத்தாடும் படியும் கேட்டிருந்தார். ஆனால் அதனை பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பிராஸ் கான் நிராகரித்தார். அவர் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதும் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். ஆடுகளம் முதல் 10 பந்துப்பரிமாற்றங்களுக்கு பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

# மானிப்பாய் இந்துவுக்கு கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ,20வயதுப்பிரிவு ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 6 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 6 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 40ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது.
(23)

# புவனேஷ்வர்குமார் விரைவில் குணமடைவார்

பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியின் போது புவனேஸ்வர்குமாருக்கு தசை பிடிப்பு ஏற்பட்டு பந்து வீச முடியாமல் இடைநடுவில் வெளியேறியிருந்தார். அவர் தொடர்ந்து இரண்டு, மூன்று போட்டிகளில் பங்கேற்கமாட்டார் என அணித் தலைவர் விராட் கோக்லி தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
புவனேஷ்வர்குமாருக்கு காலில் தசைப்பிடிப்பு காயம் ஏற்பட்டதால், அவர் போட்டி முழுவதும் பந்து வீசவில்லை. அவரின் காயம் குணமடையும் வரை ஓய்வில் இருக்க வேண்டியிருப்பதால், அவருக்கு பதிலாக அடுத்துவரும் ஆட்டங்களில் ஷமி பந்து வீசுவார். அவர் விரைவில் குணமடைவார் என நம்புகிறேன் - என்றார்.




2015ஆம்ஆண்டு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்களின் அனுசரணையுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வலைப்பந்தாட்ட அணிக்கான அன்பளிப்புச்செய்யப்பட்ட உடை(ஜெர்சி) நேற்றுமுன்தினம் கல்லூரி அதிபர் மற்றும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியரிடம் கையளிக்கப்பட்டது.(23)




# வங்கப் புலிகளின் வேட்டையில் மண்டியிட்டது மே.இ. தீவுகள்

பங்களாதேஷ் அணியினர் தமது பலத்தை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.
நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் பங்களா தேஷ் அணிகள் மோதின. இதில் பங்களா தேஷ் அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி ஆட்டக்காரர்கள் கெய்ல், ரசல் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது ஏமாற்றம் அளித்தனர். இருந்தும் ஹோப், ஹோப் அணியை தூக்கி நிலை நிறுத்தினர். பதிலுக்கு ஹிட்மயர், ஹோல்டர் அதிரடி காட்ட மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8இலக்குகளை இழந்து 321 ஓட்டங்களை எட்டியது.
பங்களா தேஷ் அணியின் பந்து வீச்சாளர்கள் பொறுப்புடன் பந்து வீசி முக்கிய தருணங்களில் முக்கிய இலக்குகளைச் சாய்த்தனர். இதில் முகமட் ஷவ்டின், ரஹ்மான் பெரும் பங்காற்றியிருந்தனர்.
பதிலுக்கு 322 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை விரட்டக் களமிறங்கிய பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்புடன் செயற்பட்டனர். இருந்தும் தீவுகளின் பந்துவீச்சாளர்கள் ஆரம்ப இணையை அடுத்தடுத்து ஆட்டமிழக்கச் செய்தனர். இணைந்தனர் சகிப் அல் ஹசன், லின்டன் தாஸ் அவர்கள் இருவரும் இணைந்து ஏனைய இலக்குகள் இழக்காது அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். சகிப் அல் ஹசன் சதம் கடந்து 16 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 124 ஓட்டங்களையும், லின்டன் தாஸ் இறுதியில்அதிரடி காட்டிநான்கு 6 ஓட்டங்கள் 8 நான்கு அடங்கலாக ஆட்டமிழக்கது94 ஓட்டங்களைக் குவித்தார். அணி 41.3 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்ட நாயகனாக சகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார்.




# கிண்ணம் வென்றது றெஜின்போ வி.க.

வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 6பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் றெஜின்போ விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
கழுகுகள் விளையாட்டுககழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் 5 பந்துப்பரிமாற்றங்கள் 6 வீரர்களைக் கொண்ட மென்பந்தாட்டத் தொடர் இடம்பெற்றது. இதில் ரேவடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றெஜின்போ விளை யாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ரேவடி விளையாட்டுக்கழக அணியானது 5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய றெஜின்போ விளையாட்டுக்கழக அணி 3.5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழ்ந்து வெற்றி இலக்கை அடைந்து கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)



# விதிமுறை மீறல் காரணமாக இலங்கை அணிக்குத் தடை?

## பரிசீலிக்கின்றது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை



பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் கட்டாய விதிமுறைகளை இலங்கை அணி மீறிய காரணத்தால் அந்த அணியை உலகக்கிண்ணத் தொடரில் இருந்து தடை செய்வதற்கு பன்னாட்டுக் கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகின்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன.

உலகக்கிண்ணத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கை - ஆஸ்திரேலிய அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 87 ஓட்டங்களால் இலங்கை அணி தோல்வியடைந்தது. தோல்விக்குப் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பை இலங்கை அணியினர் புறக்கணித்தனர். பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறையின்படி ஓர் அணி தோற்றாலோ வென்றாலோ ஆட்டத்தின் பின்னர் நடைபெறும் செய்தியாளர் சந்திப்பில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். இதனால் இலங்கை அணி பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் கட்டாய விதிமுறைகளை மீறியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் இலங்கை அணிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள பன்னாட்டுக் கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. குறைந்த பட்சமாக தண்டம் விதிக்கப்படவும் கூடிய பட்டசமாக தடை விதிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இதுகுறித்து பன்னாட்டுக் கிரிக்கெட் சபை செய்தித் தொடர்பாளர் நிருபர்களிடம் தெரிவித்ததாவது: 'பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறையின்படி, போட்டி முடிந்தபின் தோற்ற அணியும், வெற்றி பெற்ற அணியும் ஊடகங்களைச் சந்தித்து பேட்டி கொடுப்பது கட்டாய்மாக்கப்பட்டுள்ளது. இதை மீறியது இலங்கை அணியின் தவறாகும். இந்தத் தவறுக்கு நிச்சயம் இலங்கை அணிக்குத் தண்டனை உண்டு. அதிகபட்சமாக தடை விதிக்கக்கூடிய அனைத்து முகாந்திரங்களும் இருக்கின்றன. விரைவில் அறிவிக்கப்படும்' -என்றார்.

**ஐ.சி.சிக்கு பதிலடி**

இதற்கிடையே இலங்கை அணியின் மேலாளர் அசந்தா டி மெல் ஐசிசி குறித்து கடுமையாக விமர்சனம்செய்துள்ளார். 'உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க வந்திருக்கும் 10 அணிகளையும் சமமாக நடத்த வேண்டியது ஐசிசியின் பொறுப்பாகும். ஆனால், ஒவ்வொரு அணியையும் அவர்களின் தரத்துக்கு ஏற்ப நடத்துவது மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டுகிறது. இலங்கை அணிக்கு ஒருவகையான ஆடுகளத்தையும், மற்ற அணிகளுக்கு ஒரு வகையான ஆடுகளத்தையும் ஐசிசி அமைக்கிறது. அதுமட்டுமல்லாமல் போதுமான பயிற்சி வசதி இல்லை, போக்குவரத்து வசதி கிடையாது. உலகத் தரத்தில் விளையாடும் அணிகளுக்கு தங்கும்வசதி கூட மோசமான நிலையில் இருக்கிறது - என்று காட்டமாகக் குறிப்பிட்டுள்ளார் அவர். (ம)

# ஆர்ஜென்ரீனாவை வெளுத்தது கொலம்பியா



கோபா அமெரிக்க கால்பந்துத் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனாவை புரட்டிப்போட்டது கொலம்பியா.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணிகளும் மாறிமாறி ஆதிக்கம் செலுத்தி வந்தன. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியிலும் கோல்கள் பதிவான பாடில்லை. சீரான ஆதிக்கம் நீண்டு சென்றது. இந்த நிலையில் ஆட்டத்தின் 71 ஆவது நிமிடத்தில் கொலம்பியாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் றோயர். 86 ஆவது நிமிடத்தில் ஷப்டா மற்றொரு கோலைப் பதிவு செய்ய 2:0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தியது கொலம்பியா.

ஆட்டத்தின் 54 வீதமான நேரங்களில் ஆர்ஜென்ரீனாவே பந்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. அத்துடன் 13 உதைகளை கொலம்பியாவின் கோல் கம்பம் நோக்கி நகர்த்தியது. எனினும் கோல் பதிவாகவில்லை. (ம)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1578 சீட்டிழுப்பு திகதி 17.06.2019
வெற்றி இலக்கங்கள் 13 15 34 48 Z
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.32, 633, 084/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது நேரில் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 989
சீட்டிழுப்பு திகதி 2019.06.16 ஞாயிற்றுக்கிழமை
Y 25 43 51 77
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஜதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 16 . 01 . 1939



அம்மன் அடியில் 28 . 06 . 2018

**அமரர் வ.கனகசபை நற்குணசிங்கம்**
(நயினாதீவு-5)

திதி: பிரதமை (18.06.2019)

ஈரவிழிகள் காயமுன்பே ஆண்டு ஒன்று ஆகிவிட்டதையா!
"நற்குணமாய்" நீங்கள் இருந்து எமை எல்லாம்
உயர்த்தி விட்டீர்கள் குணக்குன்றாய் மிளிர்ந்த
எம் குல விளக்கே.
எமை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீரோ?
நம்புகிறோம் நாகபூசணி உங்களைக்
கரங்கொடுத்து அணைத்திருப்பாள் என்று
ஆதலால் நாம் அமைதி ஆகுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உங்கள் நினைவுடன் வாழும்**
**குடும்பத்தினர்.**

"காயத்திரி"
19, 6ம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 01 . 1933



இறப்பு 17 . 06 . 2019

**வல்லிபுரம் குழந்தைவேலு**

கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குழந்தைவேலு (17.06. 2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மல்லிகா தேவியின் ஆருயிர்க் கணவரும், திவாகரன் (ஜேர்மனி), சிவராணி (நோர்வே), சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தா (ஜேர்மனி), கருணாகரன் (நோர்வே), கிருஸ்ணாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வாகினி, சுபாங்கன், கீர்த்தனா, சரண்யா, ராகுல் ஆகியோரின் அன்புப் பேரனும், பாக்கியம், காலஞ்சென்றவர்களான பசுபதி, பூரணம், வயிரமுத்து, சோமசுந்தரம், நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2019) புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிளானை, கொல்லங்கலட்டி,**
**தெல்லிப்பளை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### தவறிவிட்டது

மயிலுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தனபாலசிங்கம் தமிழரசன் என்பவரின் தே.அ.அட்டை (892291462V), லைசன்ஸ், ATM Card 2, அடைவுப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் அதே இடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

077 109 8397, 076 612 1702

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இப்பொழுது!!!
▸ குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
▸ மேலதிக கட்டணம் எதுவும் இல்லை
UK - 350/-
France, Germany, Italy, Denmark } 500/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554 528

கொவிபதி
சீட்டிழுப்பு வாரம்: 456 சீட்டிழுப்பு திகதி 2019.06.16
வர்ணம்: பச்சை ஞாயிற்றுக்கிழமை
B 28 38 73 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 127,868,258/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 642 இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,813,730/-
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.06.17
வெற்றி இலக்கங்கள் 01 18 51 59 Z
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது நேரில் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3197 திகதி: 2019.06.17 திங்கட்கிழமை
நீலம்
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 05 29 36 56 U
போனஸ் இலக்கம் 04
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 47,377,125/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது நேரில் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18 .06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.